பக்கங்கள் : பதினாறு + II

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை (09.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

மர்மமான முறையில்

## வவுனியாவில் இளைஞன் மரணம்

(வவுனியா)

மர்மமான முறையில் இளைஞன் ஒருவர் வவுனியாவில் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த சந்தியோகு 15

தேர்தலுக்கான புதிய திகதி

## இவ்வாரத்துக்குள் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் திகதி தொடர்பில் இந்த வாரத்துக்குள் அறிவிப்பது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய நேற்று மாலை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான புதிய திகதி திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் 15

வற்றாப்பளை அம்மனுக்கு

## ஹெலியிலிருந்து மலர்தூவிய இலங்கை விமானப்படை



(பனிக்கன்குளம்)

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு ஹெலி மூலம் விமானப்படையினர் மலர் தூவினர்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்றையதினம் அதிகாலை சிறப்புற ஆரம்பமானது. 15

நாவற்குழியில்

## மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(கொடிகாமம்)

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் தொடருந்துப் பாதை சீரமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கிவிழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார். 15

## மரத்திலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மடுகந்த பகுதியில் மரத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் ஆடுகளுக்கு குழை பறிப்பதற்காக மடுகந்த 15

# யாழிலிருந்து சென்ற இந்தியருக்கு கொரோனா

## இணுவிலில் 3 வீடுகள் சுய தனிமைப்படுத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் பகுதியில் பல நாட்கள் தங்கியிருந்து புடவை வியாபாரம் செய்த இந்திய புடவை வியாபாரி ஒருவருக்கு இந்தியாவில் கொரோனா வைரஸ் அறிகுறி உள்ளதாக வெளியான தகவலையடுத்து இணுவிலில் 3 வீடுகள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சுயாதீன முறையில் இடம்பெறுமா என சந்தேகம்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சுயாதீனமான முறையில் தேர்தல் இடம்பெறுமா என்ற சந்தேகம் தற்போது எழுந்தள்ளது என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை நடாத்துவதற்கான திகதி அறிவித்தலுக்கும் வேட்பாளர்களுக்கு விருப்பு இலக்கம் வெளியிடுவதற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. 15

## பூநகரியில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு



15

## தரம்–05

புலமைப்பரிசில் பரீட்சை

வினாத்தாள்

உள்ளே...

கொரோனா வைரஸ் பாதிப்பு **1857** புதிய தொற்றாளர்கள் **22** பலி **11**

## கட்சி சார்பாக நடக்கக்கூடாது

### ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சிக்காகவோ அல்லது அரசியல் நடவடிக்கைகளிலோ ஈடுபடக்கூடாதென, ஜனாதிபதி அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு உத்தரவு வழங்கியுள்ளார். ஏதேனும் ஒரு கட்சிக்காக அரசியலில் ஈடுபடவேண்டிய தேவையிருந்தால் சட்ட ரீதியாக 15

## இம்மாத இறுதிக்குள் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்

க.பொ.த (உ/த) வகுப்புக்கள் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன

(கொழும்பு)

இம் மாத இறுதிக்குள் பாடசாலைச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. கல்வியமைச்சு வட்டாரங்களின் தகவல்படி, முதலில் க.பொ.த உயர்தர வகுப்புக்களே ஆரம்பிக்கவுள்ளன. 15

## ஒகஸ்ட் 8 இல் பொதுத் தேர்தல்?

வர்த்தமானி நாளை வெளிவரலாம் 15

மண்ணெண்ணை ஊற்றப்பட்டு

## இளம் குடும்பப் பெண் மீது தீ வைத்து எரிப்பு

(வவுனியா)

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து இளம் பெண் ஒருவர் மீது மண்ணெண்ணை ஊற்றி தீ வைக்கப்பட்ட கோரச் சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காதலனை சந்திக்கச் சென்ற யுவதி கடத்தல் முயற்சி

## கொடிகாமத்தில் பரபரப்பு

(கொடிகாமம்)

காதலன் என சொல்லப்படும் ஒருவரை சந்திக்கச் சென்ற இளம் யுவதி ஒருவரை கும்பல் ஒன்று கடத்த முயற்சித்ததால் கொடிகாமத்தில் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சுன்னாகம் பகுதியில் இருந்து பெண்கள் இருவர் கொடிகாமத்தில் உள்ள காதலர்கள் என்று கூறப்படும் இருவரை சந்திக்க சென்றுள்ளனர்.

இதன்போது இரு பெண்களையும் கொடிகாமம் பகுதியில் இருந்து மாசேரிப் பகுதிக்கு அழைத்து சென்றனர்.

அவ்வேளை குடத்தனை பகுதியில் இருந்து வந்த இளைஞர்கள் குழுவொன்று அப்பெண்களை கடத்திச் செல்ல முற்பட்ட வேளை ஒரு பெண் அவலக் குரல் எழுப்பிய வாறு அப்பகுதியிலிருந்து தப்பி பாதுகாப்பு கோரி கொடிகாமம் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இவ்வாறு சரணடைந்த பெண் பொது மக்களின் உதவியோடு பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து கொடிகாமம் பொலிஸாரும் பருத்தித்துறை பொலிஸாரும் இணைந்து மற்றைய பெண், காதலர்கள் என்று கூறப்படும் இருவர் மற்றும் கடத்தல் சந்தேகநபர்கள் உள்ளிட்டோரை வலை வீசித் தேடிவருகின்றனர்.

சம்பவத்தில் தொடர்புடைய காதலர்கள் என்று கூறப்படும் இளைஞர்கள் இருவரும் குறித்த பெண்கள் இருவரையும் திட்டமிட்டு அழைத்து, இவ்வாறு ஏனையோருடன் இணைந்து இந்த கடத்தல் முயற்சியை மேற்கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-3,114)

### புதுக்குளத்தில்

# ஏ.ரி.எம் இயந்திரம் உடைப்பு

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு நாட்கள் விடுமுறையின் பின்னர நேற்றையதினம் வங்கி திறக்கப்பட்ட சமயத்தில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் உடைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தானியங்கி பணம் வழங்கும் இயந்திர அறையினுள் காணப்பட்ட இரும்பு குப்பைக் கூடையினால் பணம் வழங்கும் இயந்திரம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவருவதுடன் எனினும் இதுவரையில் சந்தேகத்தின்பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,250)

### சாரதி அனுமதிப்பத்திரமின்றி

# போதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு ஒரு மாத சிறை

## யாழ்.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தை செலுத்திய குற்றங்களைப் புரிந்த மூவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மது போதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

மதுபோதையில் சாரத்தியம் செய்தமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் மூவருக்கும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மூவருக்கும் குற்றச்சாட்டுக்கள் வாசித்துக் காண்பிக்கப்பட்டன.

மூவரும் தம் மீதான குற்றச்சாட்டுக்களை மன்றில் ஏற்றுக் கொண்டனர்.

"மதுபோதையில் சாரத்தியம் செய்த குற்றத்துக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்கு ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (ம-3)


## வேலையாட்கள் தேவை

பேக்கரி வேலைக்கு கெட்பாஸ், மேசை வேலை தெரிந்தவர்கள் ஆண், பெண் தேவை.

**கம்பர்மலை, வல்வெட்டித்துறை**

**பரந்தாமன் சிற்றுண்டி தயாரிப்பாளர்** (C-9681)

தொடர்பு:- **077 158 4259**


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **குலோத்துங்கன் சோபனா**
அவர்களின் அன்புத் தந்தை

*அமரர்*

**வேலுப்பிள்ளை சிவபாதமணி**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி**

(C-9683)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர்
திரு. **சி.கணேசகுமார்** அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **வி.சிவஞானசுந்தரம்**

அவர்கள் கடந்த 04.06.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கல்லூரிச் சமூகம், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.**

(C-9680)

# மரண அறிவித்தல்

## செல்வி தங்கம்மா கதிரன்



*சிவகுரு வீதி, ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தங்கம்மா கதிரன் அவர்கள் நேற்று (08.06.2020) காலமாகி விட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற கதிரன் - தையல்நாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சின்னையா (ஆசிரியர்), கந்தையா, தம்பிஐயா (பொன்னு), நாகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி (பாடசாலை ஊழியர்), ஞானகௌரி (லண்டன்), தாட்சாயினி (ஊழியர் - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புப் பெறாமகளும் நவநீதராஜா (ஜெயா), கிருபாகரன் (லண்டன்), குமரகுருபரன் (சுவிஸ்), துஷ்யந்தினி (சுவிஸ்), காலஞ்சென்ற சோமஸ்கந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் கந்தசாமி, இராசபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோனியா (பல்கலைக்கழக மாணவி - வவுனியா), திவ்யா (உயர்தர மாணவி - இந்து மகளிர் கல்லூரி), புவன், அதுர்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (09.06.2020) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**சிவகுரு வீதி,**
**ஏழாலை மத்தி, ஏழாலை.**


(C-9682)

தகவல்:-
குடும்பத்தினர்

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். கந்தையா சாமி

**(K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)**



அன்பை ஆயுதமாக்கி
எம்மை ஆட்சி செய்த அப்பாவே
காலன் உமைக் கவர்ந்து
ஆண்டுகள் 11 ஆனதுவே
ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம் இதயங்களில்
நிலையாய் நிழலாடுதப்பா

எம் தேவை எதுவென்று அறிந்து
சேவை செய்யும் தெய்வம் நீங்கள்
ஏனோ எம்முடன் நீங்கள்
இல்லை என்பதை எண்ணும்போது
இதயம் உருகி
கண்களில் நீர் சொரிகிறது

உண்மை அன்புக்கு
எப்போதும் அழிவில்லை என்பதை
உங்களில் கொண்ட அன்பில்
உணர்ந்து கொண்டோம் அப்பா
இப்போதும் இனி எப்போதும்
நீங்கள் எங்களுடன்
வாழ்வதாய் எண்ணியபடி
எம் வாழ்நாளை கழித்திடுவோம்
உங்கள் ஆத்மாசாந்திபெற என்றும்
இறைவனை வேண்டி
உம் நினைவுகளுடன் நாம்...

(2945)



**மலர்வு**
**01 . 11 . 1934**

**உதிர்வு**
**09 . 06 . 2009**

1/5 பலாலி வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்
- குடும்பத்தினர்.

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தரம் 5 மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் | Meeting ID | Password |
|---|---|---|---|---|---|---|
| 09.06.2020 செவ்வாய் | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | எஸ்.சிவநாதன் | மு/ஸ்ரீசுப்பிரமணியம் ம.வி | 872 5849 3940 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | சுற்றாடல் | பி.சசிரதன் | வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி | 977 149 6807 | gr5np |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | சுற்றாடல் | கே.குவேனி | யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை | 814 4505 7317 | denp |
| 10.06.2020 புதன் | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பி.சுதர்ஷன் | கிளி/பிரமந்தனாறு ம.வி | 849 4160 2290 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | ஆர்.ராகுலன் | மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி | 876 0026 8932 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பொன்.பிரகலாதன் | கிளி/விவேகானந்தா ம.வி | 977 149 6807 | gr5np |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 1 | எஸ்.வினோத்குமார் | யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை | 872 6235 1712 | denp |
| 11.06.2020 வியாழன் | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 2 | எஸ்.நிசாந்தன் | மு/அம்பலப்பெருமாள்குளம் அ.த.க.பாடசாலை | 829 8594 2221 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | பி.ஜசிதரன் | யா/கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை | 818 5230 1493 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | சுற்றாடல் | பி.சசிரதன் | வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி | 977 149 6807 | gr5np |
| | 5.00 பி.ப - 6.00 பி.ப | பகுதி 1 | எஸ்.பத்மலோஜினி | யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை | 835 1274 8417 | denp |
| 12.06.2020 வெள்ளி | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | என்.பத்மராஜ் | மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி | 871 5049 3038 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | எஸ்.சிவநாதன் | மு/ஸ்ரீசுப்பிரமணியம் ம.வி | 853 8105 5874 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பொன்.பிரகலாதன் | கிளி/விவேகானந்தா ம.வி | 977 149 6807 | gr5np |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 1 | ரி.சுரேஷ்குமார் | யா/புனித ஜோன்பொஸ்கோ ம.வி | 885 2887 8218 | denp |
| 13.06.2020 சனி | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | எஸ்.நிசாந்தன் | மு/அம்பலப்பெருமாள் குளம் அ.த.க.பாடசாலை | 896 4507 8196 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | ஜே.சிவகுமாரன் | மு/ஸ்ரீசுப்பிரமணியம் ம.வி | 833 9430 1805 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | தமிழ் | ரி.கிருபாலன் | கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை | 977 149 6807 | gr5np |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 1 | சண்.சுதர்சன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 862 4109 4594 | denp |
| 14.06.2020 ஞாயிறு | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | ஜி.ஐங்கரன் | தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா | 881 1796 0176 | denp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 2 | சண்.சுதர்சன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 839 4240 3560 | denp |

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் க.பொ.த சா/த மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் | Meeting ID |
|---|---|---|---|---|---|
| 09.06.2020 செவ்வாய் | 06.00 மு.ப - 07.00 மு.ப | ICT | வி.ரவீந்தர் | யா/வயாவிளான் மத்திய கல்லூரி | 249 156 8241 |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | விஞ்ஞானம் | ஆர்.சுகானன் | மு/இரணைப்பாலை றோ.க.ம.வி. | |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | வரலாறு | ஜெ.ஜெயகணேஸ் | சென்.பற்றிக்ஸ் கல்லூரி | |
| 10.06.2020 புதன் | 06.00 மு.ப - 07.00 மு.ப | தமிழ் | க.மு.நித்தி | சென்.பற்றிக்ஸ் கல்லூரி | |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | கணிதம் | எம்.கஜீபன் | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | |
| 11.06.2020 வியாழன் | 06.00 மு.ப - 07.00 மு.ப | ICT | வி.ரவீந்தர் | யா/வயாவிளான் மத்திய கல்லூரி | |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | விஞ்ஞானம் | எஸ்.கோபி | சென்.பற்றிக்ஸ் கல்லூரி | |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | கணிதம் | எம்.கஜீபன் | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | |
| 12.06.2020 வெள்ளி | 06.00 மு.ப - 07.00 மு.ப | விஞ்ஞானம் | ஆர்.சுகானன் | மு/இரணைப்பாலை றோ.க.ம.வி. | |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | ICT | வி.ரவீந்தர் | யா/வயாவிளான் மத்திய கல்லூரி | |
| 13.06.2020 சனி | 06.00 மு.ப - 07.00 மு.ப | கணிதம் | ரி.நித்தியானந்தம் | யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் | |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | வரலாறு | ஜெ.ஜெயகணேஸ் | சென்.பற்றிக்ஸ் கல்லூரி | |
| 14.06.2020 ஞாயிறு | 06.00 மு.ப - 07.00 மு.ப | விஞ்ஞானம் | ஆர்.சுகானன் | மு/இரணைப்பாலை றோ.க.ம.வி. | |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | கணிதம் | ரி.நித்தியானந்தம் | யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் | |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | வரலாறு | ஜெ.ஜெயகணேஸ் | சென்.பற்றிக்ஸ் கல்லூரி | |

## வலயக் கல்விப் பணிமனை - முல்லைத்தீவு மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 09.06.2020 | 10.00 மு.ப - 10.40 மு.ப | தமிழ் | 11 |
| 10.06.2020 | 9.00 மு.ப - 9.40 மு.ப | இந்து நாகரிகம் | 13 |
| | 10.00மு.ப - 10.40 மு.ப | தமிழ் | 13 |

| திகதி | நேரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 11.06.2020 | 10.00மு.ப - 10.40 மு.ப | தமிழ் | 11 |
| | 10.40 மு.ப - 11.20 மு.ப | ஆங்கிலம் | 11 |
| | 9.00 மு.ப - 9.40 மு.ப | இந்து நாகரிகம் | 13 |
| 12.06.2020 | 10.00மு.ப - 10.40 மு.ப | தமிழ் | 13 |
| | 10.40 மு.ப - 11.20 மு.ப | ஆங்கிலம் | 11 |

# இராசிபலன்

09.06.2020
வைகாசி 27, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 10.28 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 4.54 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சந்திராஷ்டமம்- மிருகசிரிடம், திருவாதிரை
சங்கடஹரசதுர்த்தி விரதம்

வளவன்



மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் பக்கபலமாக இருப்பர், ஆரோக்கியமான நாள்.



ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று நல்லவிதமாக அமையலாம், பயணங்கள் கைகூடும்.



மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் சந்தோசம் காணவேண்டிய நாள், திடீர் செலவுகள் ஏற்படலாம்.



கடகம்

ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



சிம்மம்

நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.



கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், அரச வழியில் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்,சேமிப்பு உயரும் நாள்.



துலாம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பெற்றோர் வழியில் பிரியம் கூடும் நாள்.



விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் முன்னேற்றத்தில் உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



தனுசு

நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.



மகரம்

நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.



கும்பம்

சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


உன் கடமையில் இருந்து தவறும் போது மட்டும் வருத்தப்படு.

# கொரோனா நாட்டைவிட்டு நீங்கவில்லை மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## சுகாதார சேவை பிரதி இயக்குநர்

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனா வைரஸ் முடிவுக்கு வந்து விட்டதாக எவரும் எண்ணக் கூடாது என சுகாதார சேவை பிரதி இயக்குநர் விசேட வைத்தியர் பபா பலிஹவன தெரிவித்துள்ளார்.**



நாடு வழமைக்குத் திரும்பி விட்டது என பேருந்தில் அல்லது ரயிலில் பயணிக்கும் போது சுகாதார ஆலோசனைகளை மறந்து செயற்பட்டால் மீண்டும் கொரோனா பரவும் ஆபத்து ஏற்படும்.

இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தியுள்ள சுகாதார ஆலோசனைகள் பலருக்கு மறந்து போய்விட்டன.

கொரோனா தற்போது முடிவுக்கு வந்துள்ளதாக எண்ணி பலர் செயற்படுகின்றனர்.

அப்படி இல்லை. அனைவரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும்.

சுப்பர் மார்க்கட்டுக்குச் சென்றாலும், கடைகளுக்குச் சென்றாலும் சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டும். தங்களுக்கு தேவையான முறையில் வீதிகளில் செயற்பட முடியாது. இன்னமும் கொரோனா நாட்டை விட்டு நீங்கவில்லை. நோயாளிகள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுமக்கள் பாரிய அளவில் வீதிக்கு வருவதற்கு முயற்சிக்கின்றார்கள். அவ்வாறு வீதிக்கு வராதீர்கள் என்றே நான் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-8)

# திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தீ; மீள் சுழற்சி இயந்திரங்கள் முற்றாகச் சேதம்

(காத்தான்குடி)



காத்தான்குடி நகர சபையின் திண்மக்கழிவுகள் மீள் சுழற்சி நிலையத்தில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக திண்மக்கழிவு மீள் சுழற்சி இயந்திரம் முற்றாகச் சேதமடைந்தது. இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் காத்தான்குடி ஆறாம் குறிச்சி ஏ.எல்.எஸ். மாவத்தையிலுள்ள காத்தான் குடி நகர சபையின் திண் மக்கழிவு மீள் சுழற்சி நிலையத்தில் தீ பரவியது. இதில் 2 கோடி ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள் முற்றாக எரிந்தன.

இதனையடுத்து அங்கு விரைந்த காத்தான்குடி நகர சபை ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

கொட்டப்பட்ட திண்மக்கழிவில் தீ பரவியதையடுத்து திண் மக்கழிவு முகாமைத்துவ மீள் சுழற்சி செய்யும் நிலையத்திலுள்ள இயந்திரங்களிலும் பரவியது.

இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ஐ-2-5)

# தனித்துக் களமிறங்குவதும் வெல்வதும் உறுதி-அனுஷா



"மலையக மக்கள் முன்னணியின் யாப்பின் ஏற்பாடுகளின் சரத்துக்களுக்கமைய நான் நீக்கப்படவில்லை" என அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "மலையக மக்கள் முன்னணியிலிருந்து நான் நீக்கப்பட்டதாக ஊடகத்தின் வாயிலாக அறிந்தேன்.

மலையக மக்கள் முன்னணியின் யாப்பின் ஏற்பாடுகளின் சரத்துக்களுக்கமைய நான் நீகப்படவில்லை. நானே பிரதி செயலாளர் நாயகமாக இன்னும் இருக்கிறேன்.

நான் பதவியிலிருக்கும் போதே இன்னொருவரை நியமித்ததற்கு எதிராக என்னால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அமரர் சந்திரசேகரனின் மகளான, சட்டம் படித்து சட்டத்தரணியான என்னை இவ்வாறான ஊடக அறிக்கைகள் ஒரு போதும் பின்னடையச் செய்யவோ அல்லது என்னுடைய அரசியல் பயணத்தை தடுக்கவோ இயலாது.

எனது தந்தை அமரர் சந்திரசேகரன் எவ்வாறு 1994 ஆம் ஆண்டு தனித்து களமிறங்கினாரோ அதேபோன்று எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் நான் தனித்து களமிறங்குவதும் வெல்வதும் உறுதி.

இம்முறை தேர்தலில் வெற்றி பெற்று அமரர் சந்திரசேகரன் வழிவந்த மலையக மக்கள் முன்னணி ஆதரவாளர்களுக்கும் மலையக மக்களுக்காகவும் ஆதரவாக எனது குரல் என்றென்றும் ஒலிக்கும்" என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமரர் சந்திரசேகரனின் மறைவுக்குப் பின்னர் அவரைக் கௌரவப் படுத்தும் வகையில் அனுஷா சந்திரசேகரனுக்கு பிரதிச் செயலாளர் நாயகம் பதவி வழங்கப்பட்டது.

எனினும் சுயநலத்திற்காக அவர் கட்சியின் விதிகளை மீறிச் செயற்பட்டு வருகிறார். எனவே அவரை கட்சியில் இருந்து நீக்கியுள்ளோம் என்று மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் அ.லோறன்ஸ் அறிக்கையில் வெளியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (4-5)

# யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் 2020-2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையைத் தெரிவுசெய்வதற்கான பொதுக்கூட்டம் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில், தலைவராக அ.ரவிவர்மன்- புத்தூர் வளர்மதி வி.கழகம், செயலாளராக கே.வாகீசன் - புத்தூர் கலைமதி வி.கழகம், பொருளாளராக எஸ்.யசோகோகுலன் - நீர்வேலி காமாட்சி அம்பாள் வி.கழகம், உபதலைவர்களாக ந.சுதேஸ்குமார் - வடமாகாண மத்தியஸ்தர் சங்கம், எஸ்.சாகித்தியன்-மட்டுவில் மோகன்தாஸ் வி.கழகம், உப செயலாளராக எஸ்.தயாளபாலன் - காங்கேசன்துறை ஐக்கியம் வி.கழகம் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.நாகேந்திரம்- அரியாலை ஐக்கியம் வி.கழகம், த.காந்தரூபன் - கோப்பாய் கரீஸ் வி.கழகம், ப.தார்மீகன் -ஆவரங்கால் இந்து இளைஞன் வி கழகம், த.மயூரன், தொண்டைமானாறு கலையரசி வி.க, இ.வேதீஸ்வரன்- உடுப்பிட்டி சிவகுமாரன் வி.கழகம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (2-5)

# தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டி விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

திறன் அபிவிருத்தி வேலை வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இப்போட்டித் தொடருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31.03.2020 ஆக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்போட்டித் தொடருக்கான முடிவுத்திகதி எதிர்வரும் 24.07.2020 ஆக தேசிய உற்பத்தித்திறன் செயலக இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடருக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை துறை, அரச துறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் தேசிய உற்பத்தித்திறன் செயலக த்திற்கு கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (2-5)

# விஞ்ஞானபூர்வ ஆய்வுகளின் தீர்வு வரும்வரை வின்ஞ் பொறிமுறை பயன்படுத்தத் தடை

(யாழ்ப்பாணம்)

கரைவலை மீன்பிடி முறையில் வின்ஞ் பொறிமுறையை பயன்படுத்துவது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை வின்ஞ் பொறிமுறை பயன்படுத்துவதை இடைநிறுத்துமாறு கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் கரைவலை முறையிலான கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்கள் உழவு இயந்திரத்தில் வின்ஞ் பொறிமுறையை பயன்படுத்துவது தொடர்பில் நேற்று நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வின்ஞ் பொறிமுறை பயன்படுத்துவதனால் பாரம்பரிய சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் கடல் வளத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு மீனவர் பிரதிநிதிகளினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதேவேளை, கரைவலை செயற்பாட்டிற்கு தேவையான தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு காரணங்களினால் உழவு இயந்திரம் மற்றும் வின்ஞ் பொறிமுறை பயன்பாட்டை தெரிவு செய்துள்ளதாக தெரிவித்த கரைவலை தொழிலில் ஈடுபடும் தரப்பினர், அதற்காக தாங்கள் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வின்ஞ் பயன்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் தொடர்பில் "நாரா" எனப்படும் நீர்வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக விஞ்ஞானபூர்வ ஆய்வுகளை மேற்கொண்டு அதனடிப்படையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானம் கடல் வளத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாதவாறு நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (2-5)



யாழ்.பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நிதிப் பங்களிப்பில் குருநகர் , அடம்பன் வீதி, முதலாம், இரண்டாம் ஒழுங்கைகள் மற்றும் சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அருகிலமைந்துள்ள வடிகால் என்பன புனரமைக்கப்பட்டன. (படம்:-குருநகர் செய்தியாளர்)

# புறப்பட்டாள் யாழ்தேவி

(யாழ்ப்பாணம்)

யாழில் இருந்து கொழும்பு நோக்கிய புகையிரத சேவை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேற்று மீண்டும் ஆரம்பமானது.

யாழில் இருந்து புறப்பட்ட யாழ்தேவி வவுனியாவில் இருந்து நேற்று காலை 8.10 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பயணிகள் ஏற்றப்பட்டதுடன் புகையிரத நிலையத்தில் சமூக இடைவெளியும் பேணப்பட்டது.

வவுனியா புகையிரத நிலைய உத்தியோகத்தர்கள் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பயணிகளுக்கு் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. (2-5-8)




விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் அனுசரணையில் நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக மண்டபத்தில் இரத்ததான முகாம் நடை பெற்றது.

(படம்-குப்பிழான் செய்தியாளர்)

# கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.38 மணி முதல் 11.50 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறும்.

இந்நிகழ்வுகள் யாவும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டளவில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெறுமென ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-5)




முன்னாள் பாராளுமன்ற உருப்பினரும் சபாநாயகருமான மு.சிவசிதம்பரத்தின் 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் சேரன் சிவராஜா, இளங்கோ மற்றும் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்-கரணவாய்செய்தியாளர்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 170 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 200 |
| தக்காளி | 160 | 140 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 140 | 140 | 160 |
| கரட் | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 50 | 50 | 40 | 60 |
| புடோல் | 100 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 180 | 60 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 260 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 180 | 250 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 130 | 120 | 120 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 | 120 |
| லீக்ஸ் | 150 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 130 | 120 | 160 |
| கறிமிளகாய் | 100 | 100 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 200 |
| போஞ்சி | 220 | 280 | 260 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 200 | 140 | 250 | 240 |
| வெங்காயப்பூ | — | 220 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 100 |

# பின்னடைவு ஏற்பட்டுள்ள ஏற்றுமதித்துறைக்கு தற்போது புதிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன

## இனி முன்னோக்கிச் செல்லலாம் என்கிறார் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர்

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள ஏற்றுமதித்துறைக்கு தற்போது புதிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பிரபாஸ் சுபசிங்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்று ஒழிப்பிற்கான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கு அதிகளவிலான வர்த்தகக் கட்டளைகள் பெறப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்யும்வாய்ப்பு கிடைத்துள்ளது.

கிடைக்கப்பெற்ற வர்த்தகக் கட்டளைகளை துரிதகதியில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஏற்றுமதியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை விவசாய மற்றும் பதனிடப்பட்ட உணவுப் பொருட்களுக்கும் புதிய வர்த்தகக் கட்டளைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனினும் பொதுவாக ஏற்றுமதிக் கேள்விகள் வீழ்ச்சியடைந்த நிலையிலேயே உள்ளன.

இதுவரை மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை கையுறைகள் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு போதியளவு ஏற்றுமதி உத்தரவுகள் கிடைத்துள்ளன.

அப்படியான பொருட்களை உற்பத்தி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு இந்த வருட இறுதி வரை சிறந்த வாய்ப்புள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு காரணமாக ஆடையுற்பத்தி ஏற்றுமதி இலக்கு 40 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலை காரணமாக 2 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது என ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பிரபாஸ் சுபசிங்க தெரிவித்தார். (ஜ-8)


பழைமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (2975)

**ரெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7130 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HND IT, அரச தொழில்.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: G/8087 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: செவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: தேசிய கல்வியியல் டிப்ளோமா ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் ஆசிரியை தொழில் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/7132 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம்<br>தொ.இ: G/8092 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. விற்பனைப் பிரதிநிதி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/7134 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 31 ½ செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: ஆட்பதிவுத் திணைக்களம்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் மணமகள் விவாகரத்துப் பெற்றவர்.<br>தொ.இ: G/8116 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: செவ் 1 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. விற்பனை முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7140 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/8124 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



**பதவி வெற்றிடம்**

- கணக்காளர் (பெண்)
- அலுவலகச் செய்தியாளர்கள் வெளிக்களம் (ஆண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் உள்ளகம் (பெண்கள்)
- விளம்பர வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)

**தகைமை**

க.பொ.த. உயர்தரம், 25 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் 12.06.2020 க்கு முன் கிடைக்கக் கூடியவாறு, தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்
வலம்புரி

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# காலசர்ப்ப யோகமும் உலகப் பேரிடரும்



முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்
சோதிட ஆய்வாளர்,
சே.பி.சோதிட வாசிப்பாளர்

வேதத்தின் அங்கமான வேதாங்கம் சிட்சை, வியாகரணம், சந்தகம், நிருத்தம், சோதிடம், கற்பம் என ஆறாக வகுத்து உரைக்கப்படுகிறது. எனவே வேதாங்கம் ஆறினுள் ஒன்றாகச் சோதிடம் விளங்குகின்றது. இராசி, நட்சத்திர நிலையில் அமைந்தியங்கும் கோள்களின் போக்கிலே உலகுறு உயிர்கள் அடைந்து கொள்ளும் தாக்கத்தின் தன்மையினைச் சோதிடக்கலையானது சோதித்துத் திடப்படுத்தி அனுபவ ஆதாரங்களுடன் விளக்குகின்றது. அந்தவகையிலே அண்மை நாட்களிலே உலகமானது அடைந்து கொள்ளும் அவலத்தினைச் சோதிட அடிப்படையில் அறிந்து கொள்வது அவசியமானதாகின்றது.

சோதிடத்திலே பல யோகங்கள் எடுத்தியம்பப்படுகின்றன. பெரும்பாலான யோகங்கள் சுப யோகங்களாக இருப்பினும் ஒரு சில யோகங்கள் அசுப யோகங்களாக உள்ளன. அந்தவகையிலே காலசர்ப்ப யோகமென்பது அசுப யோகமொன்றாக விளங்குகின்றது. சாயாக்கிரகங்கள் என்று சோதிடத்திலே குறிக்கப்படுகின்ற இராகு, கேது ஆகிய இரண்டிற்குமிடையே குறிப்பிடத்தக்க அனைத்து கிரகங்களும் அடங்கிவிடுகின்றதோர் அமைப்பான காலசர்ப்ப யோகம் தனிப்பட்டதோர் நிலையிலும் உலக நாடுகள் நிலையிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றது.

இராகு, கேதுக்களானது சஞ்சார நிலையிலே அவ்விரு கிரகங்களுக்கும் இடப்புறமாவோ வலப்புறமாகவோ ஏனைய கிரகங்கள் யாவும் அடங்கிவிடும் நிலையானது காலசர்ப்ப யோகமாக அமையும் நிலையிலே வலப்புறமாக அமையும் நிலை அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துமென்றில்லை. ஆனால் இடப்புறமாக அடங்கிவிடும் நிலையிலே கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். பொறியில் அகப்பட்ட எலியானது குறிப்பிடத்தக்களவு நேரம் உயிருக்குப் போராடுகின்ற வகையிலே மீளவும் முடியாது தப்பி வாழவும் முடியாது பேரிடர் படும் நிலைக்கு உட்படுகின்றது. அந்த நிலைதான் உலகு தழுவிய நிலையில் தற்போது ஏற்பட்டுள்ளது.

சர்ப்பக்கிரகங்களான இராகுவும் கேதுவும் விஷத்தன்மையான பாதிப்புக்களைத் தரத்தக்கன. இராகு விஷரோகங்கள் பித்தம் போன்றவற்றையும் கேது சொறி, சிரங்கு முதலிய விஷநீர்ப்பீடைகளையும் தரத்தக்கன. அந்தவகையில் அண்மையில் ஏற்பட்டுள்ள "கொரோனா வைரஸ்" பாதிப்பினையும் அவதானிக்க வேண்டியுள்ளது. 25.12.2019 ஆம் திகதியன்று புதன் தனுசு இராசிக்குள் நுழைந்து கேதுவின் செல்வாக்கிற்கு உட்படுகின்றது. அத்துடன் **28.12.2019 ஆம் திகதி சந்திரனும் தனுசு இராசிக்குள் புகுந்து கேதுவின் செல்வாக்கிற்குள் அடங்கி விடுகின்றது.** இந்த நிலையில் செவ்வாயைத் தவிர ஏனைய கிரகங்கள் யாவும் இராகு- கேதுக்களுக்கிடையில் கட்டுப்படும் நிலையில் பாதிப்பான காலசர்ப்பயோகம் ஆரம்பிக்கின்றதெனலாம்.

தனுசு இராசியில் சந்திரன், புதன், சூரியன், குரு, சனி, கேது நின்றதாகிய இந்தச் சந்தர்ப்பத்திலே தனித்து நின்ற இராகுவின் செல்வாக்கு இவர்கள் மீது அமைந்து தொற்றுநோய் பெருகுவதற்கான சூழல் அமைந்துள்ளது. இருப்பினும் தனுசுவில் ஆட்சி பெற்றிருந்த குருவின் பார்வை இராகு மீது வீழ்ந்தமையால் குரு பார்த்திடில் கோடி பாவம் நீங்கும் என்ற அடிப்படையில் இராகுவின் தாக்கம் பேரளவில் அமையாது. சற்றுத்தணிவான நிலையில் இடர் அமைந்ததெனலாம். இவ்வாறான 24.01.2020 இல் இயற்கைப் பாவியான சனி சொந்தவீடாகிய மகரத்தினுள் நுழைந்தாலும் 07.02.2020 இல் மற்றோர் இயற்கைப் பாவியாகிய செவ்வாய் தனுசுவில் நுழைந்து கேதுவின் ஆதிக்கத்துள் அடங்கும் நிலையிலே முழு அளவிலான காலகர்ப்ப நிலை ஏற்பட்டு தொற்றுநிலை அழிவு உலக ரீதியாக பல்கிப் பரவும் சூழல் தோற்றுவாய் ஆகிவிட்டது.



இந்தநிலை 21.03.2020 வரை தொடரும் கேதுவுடன் இணைந்து தீமையான சூழலுக்கு வழிசெய்து இராகுவின் தாக்கத்தையும் சந்தித்த செவ்வாய் 22.03.2020 அன்று தனது உச்சவீடான மகரத்திற்குள் நுழைந்து கொள்கின்றது. இங்கு இயற்கைப் பாவிகளான சனியும் செவ்வாயும் இணைந்து கொண்டவகையில் கடுமையானதோர் திணறடிக்கும் சூழல் அமைகின்றது. 29.03.2020 அன்று அதிசார கதியிலே வியாழன் தனது சொந்த வீடாகிய தனுசினை விட்டு நீச வீடாகிய மகரத்துக்குள் நுழைகின்றது. குரு நீச பங்கமுற்றாலும் பாவிகளான **செவ்வாய், சனி ஆகியோரின்** இணைவு புவியோரைப் பலமாக வாட்டும் சூழலாகிவிட்டது.

இவ்வாறானதொரு சூழலிலே உடல்காரகனான சந்திரன் 31.03.2020 அன்று மிதுனத்தினுள் நுழைந்து இராகுவோடு சம்பந்தமுற்று 02.04.2020 நண்பகல் வரை சஞ்சரித்து இராகுவின் செல்வாக்கிற்கு உட்பட்ட வகையில் விஷ நோய்கள், உதிரம் தொடர்பான நோய்கள் தோன்றும் கடுமையான சூழல் எழுந்தது. இத்துடன் செவ்வாய், சனி, குரு என்பவற்றின் மகர இராசிச் சஞ்சாரம் 04.05.2020 வரை தொடர உச்சச்செவ்வாய், ஆட்சிச் சனி, நீச பங்கக் குரு என்ற நிலையில் ஏற்ற இறக்கம் ஏற்படினும் சனி, செவ்வாய் ஆகிய இயற்கைப் பாவிகள் தங்கள் கடுமையைக் காட்டவே செய்வர்.

25.04.2020 இல் புதன் நீச வீடு விட்டு மேடம் இராசியை அடைந்ததும் 04.05.2020 இல் செவ்வாய் சனித் தொடர்பு விட்டு கும்ப இராசியை அடைந்ததும் ஒருபுறம் சாதாரண சூழலென்று எண்ணச் செய்திருக்கும். எவ்வாறாயினும் குரு, சனி கூட்டு 29.06.2020 வரை தொடர்வதால் மழை விட்டும் தூவானம் அடங்காதது போன்றதொரு சூழல் தென்படும்.

இது இவ்வாறிருக்க 25.05.2020 இல் இராகு நிற்கும் மிதுன இராசியில் புதன் செல்லும்போது பொறியில் சிக்கிய எலிக்கு அமைந்தது போன்ற இறுக்கம் சற்றுத் தளர்கிறது. மூச்சுவிடத்தக்க ஒரு சூழல் அமையும். 30.05.2020 அன்று இராகுவைக் கடந்து ஒருபாகை வரை விலகி நிற்கும் புதன் காலசர்ப்ப யோகத்தின் தளர்வினைச் சற்றுக் காட்டலாம். இது ஒரு புறமிருக்க 10.05.2020 முதல் 12.05.2020 வரை கேதுவோடு சந்திரன் சேரும் சந்தர்ப்பத்தில் இராகுவின் தாக்கம் ஒரு சாதாரணமான சூழலைக் காட்டினாலும் ஆட்சிபெற்ற புதனின் பார்வை கடுமை நிலையினைத் தணித்து விடலாம். இத்துடன் 05.06.2020 இல் மிதுனத்தினுள் **நுழையும் சூரியன் 20.06.2020 இல் இராகுவைக் கடந்து அப்பால்** செல்லும் நிலையில் காலசர்ப்ப யோகத்தின் தாக்கத்தில் தணிவு அமையலாம்.

மேற்படி நிலை அமைந்த அதேவேளை வக்கிர கதியிலே 29.06.2020 அன்று தனது ஆட்சி வீடான தனு இராசியுள் குரு நுழைகின்றது. இந்த நிலையை இராகு, கேதுக்களின் பாதிப்பினைச் சற்றுத் தளர்த்துவதாகும். இந்நிலையிலே 23.04.2020 அன்று இராகு தன் நீசவீடான இடபத்திற்கும் கேது தன் உச்ச வீடான விருட்சிகத்திற்கும் மாறிச் சென்று விடுகின்றன. அதேநேரத்தில் சூரியனும் சந்திரனும் கேது நிற்கும் விருச்சிகத்தினுள் நுழைந்தாலும் பாகை நிலையில் சூரியன் சற்று விலகியே கேதுவிற்குச் சிறிது தூரமாக அமைகின்றது. 28.11.2020 இல் புதனும் 10.12.2020 இல் சுக்கிரனும் விருச்சிகத்தினுள் நுழையினும் சூரிய சந்திரர்களின் பின் புதன் கேது சம்பந்தமுற்று 15.12.2020 இலும் சுக்கிரன் கேது சம்பந்தமுற்று 31.12.2020 இலும் கேதுவைக் கடந்து உட்புகுந்து முழு அளவிலான காலசர்ப்ப யோகத்தினை ஏற்படுத்தி பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாகின்றது.


13.04.2021 அன்று செவ்வாய் இடப இராசியை விட்டு வெளியேறும் வரை காலசர்ப்பத்தின் பிடியானது தொடர்ந்து அமையும். இந்தக் காலசர்ப்ப நிலை பாரிய பாதிப்புக்களைத் தரலாமென அஞ்சப்பட்டாலும் 05.12.2020 இல் நீச பங்கமுற்று மகர இராசிக்ள் செல்லும் குரு இடப இராசியான இராகு நிற்கும் வீட்டினைப் பார்க்கவுள்ளது. 05.04.2020 வரை வல்லவராய் இராகுவின் மீது இறுக்கமாக அமைந்து அதனது கருமையை தணித்திடவே செய்யும்.

அதாவது குரு பார்த்திடின் கோடி பாவம் நீங்கும் என்றபடி இராகுவின் பாதிப்பு தணிவுற்றதாகவே காணப்படும்.

எது எவ்வாறாயினும் காலசர்ப்பத்தின் பாதிப்புள்ள நிலையிலே கரும்பாம்பு, செம்பாம்பு பிரீதி, நாகபூஷணி மற்றும் விக்னேஸ்வரர் வழிபாடு சித்த மருத்துவ மூலிகைகள் தொடர்பிலான **பாதுகாப்புக்களைத் தேடுதல் அவசியமானதாகும்.**




# வேஷம்போட்ட கழுதை



ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அந்தக்கழுதைக்கு தேவையான தீவனத்தை வைக்க முடியவில்லை. வயிறார புல் மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும் இல்லை. இந்தக் காரணத்தால் கழுதை நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. சலவைத் தொழிலாளி கழுதையின் நிலை கண்டு மிகவும் கவலைப்பட்டான்.

ஒருநாள் சலவைத் தொழிலாளி காட்டு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு புலி செத்துக் கிடிப்பதைக் கண்டான். அதைக் கண்டதும் சலவைத் தொழிலாளிக்கு ஒரு யோசனை தோன்றியது.

இந்தப் புலியின் தோலை உரித்து அதைக் கழுதை மீது போர்த்தி நெல் வயல்களில் விட்டு மேயச் செய்தால் உண்மையாகவே புலி மேய்வதாக எண்ணிப் பயந்து கொண்டு வயலுக்குச் சொந்தக்காரர்கள் பேசாமலிருந்து விடுவார்கள். கழுதை வயிறார மேயும் என்று சலவைத் தொழிலாளி நினைத்து கொண்டான். புலித் தோலை உரித்து எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

மறுநாள் கழ்தை மீது புலித் தோலைப் போர்த்தி விளைந்திருந்த வயல்கள் பக்கமாக போகச் செய்தான்.

புலிதான் பயிரை மேய்கிறது என்று எண்ணிக் கொண்டு குடியானவர்கள் அதை விரட்டப் பயந்து கொண்டு பேசாமலிருந்து விட்டார்கள்.


கழுதை விளைநிலத்தில் அன்றாடம் வயிறார மேய்ந்து நன்றாக கொழுத்துவிட்டது.

ஒருநாள் கழுதை புலித் தோலைப் போர்த்திக் கொண்டு நெல் வயலில் மேய்ந்து கொண்டிருந்தது.

அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒரு பெண் கழுதை உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கியது. அதைக்கேட்ட புலித் தோல் போர்த்திய ஆண் கழுதை பெண் கழுதையின் குரலைக் கேட்டதும் உற்சாகமடைந்து தானும் உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கிவிட்டது. குடியானவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது.

எல்லோரும் ஒன்று சேர்ந்து தடிகளை எடுத்துக் கொண்டு வந்து கழுதையை நன்றாக அடித்துக் கொன்று விட்டார்கள்.

## வரைந்து பழகுவோம்




## நிறந்தீட்டுங்கள்



# இந்தியாவைப்போன்ற நீண்ட காலக்கொள்கை ஒன்றை இலங்கைக்கும் வகுப்பது நன்மைதரும்-சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

**இந்தியாவை முன்னுதாரணமாகக் கொண்டு, நீண்ட காலத்திற்குரிய ஒரு ஸ்திரமான கொள்கையொன்றை இலங்கை வகுக்க வேண்டும் என மகாவலி விவசாயம் நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய வளர்ச்சி அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், "எந்தவொரு நாட்டிலும் நீண்ட காலத்திற்கான ஒரு கொள்கைத் திட்டமொன்று காணப்படும்.

இந்தியாவில் 20 வருடத்திற்கான ஸ்திரமான கொள்கையொன்று வகுக்கப்பட்டுள்ளது. அங்கு எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அந்த பொதுக் கொள்கையொன்றின் கீழ் தான் அந்நாடு பயணிக்கும்.

தற்போது 30 வருட கால எல்லையைக் கொண்ட ஒரு கொள்கையை அவர்கள் வகுக்கிறார்கள். ஆனால் எமது நாட்டில் இந்த நிலைமை இல்லை. தற்போது புதிதாக ஒரு அரசாங்கம் ஆட்சியமைத்துள்ளது.

இதனால், கடந்த கால செயற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன. இதற்குப் பின்னர் ஒரு புதிய அரசாங்கம் வந்தாலும் இதே நிலைமைதான் காணப்படும்.



எமக்கும் இந்தியாவைப் போன்ற நீண்டகால கொள்கையொன்றை வகுக்க வேண்டும். இதன் ஊடாகத் தான் கீழ்தட்டு வரை அபிவிருத்திகளை விரிவாக்க முடியும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-5)

# வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குங்கள்

## பிரதமருக்கு றிசாத் கடிதம்

(கொழும்பு)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் புத்தளம் மாவட்டத்தில் வசித்துவரும் பொது மக்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் கடிதம் மூலம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

**இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், வடக்**கிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் புத்தளம், கற்பிட்டி, முந்தல், வண்ணாத்திவில்லு உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவில் வாழும் மக்களுக்கு குறித்த நிவாரணத்தொகையினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புத்தளம்மாவட்டத்தில்வாழும் மக்களுக்கு நிவாரணத்தொகை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரையில் நிதி கிடைக்கப்பெறவில்லை.

நாட்டின் பிரதமர் என்ற வகையில், குறித்த மக்களுக்கு உதவித் தொகையினை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான பணிப்புரையினை அரச அதிகாரிகளுக்கு வழங்குமாறும் இடம்பெயர்ந்துள்ள குறித்த பொதுமக்களுக்கான ஐயாயிரம் ரூபா உதவித்தொகை கிடைக்கப்பெறாமல் இருப்பதன் பின்னணி தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் முன்னாள் **அமைச்சர் றிசாத் பதியுதீன் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.** (2-6)

# அழுகிய மரக்கறிகளுடன் திருமலையில் இருவர் கைது

(திருமலை)

திருகோணமலை அக்போபுர பகுதியில் பாவனைக்குதவாத உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பவற்றுடன் இரண்டு பேரை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

**தம்புள்ள பகுதியிலிருந்து லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்ட 2 ஆயிரம் கிலோ வெங்**காயம் மற்றும் கிழங்கு போன்றவற்றை சோதனையிட்டபோது அவை பாவனைக்குதவாத பொருட்கள் என கண்டறியப்பட்டது.

இதனையடுத்து இவர்கள் இருவரையும் கடந்த சனிக்கிழமை கைது செய்து அவர்களை பொதுச்சுகாதார பரிசோதகரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஜ-4-5)



மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதிகள். மன்னார் பிரதேச செயலாளர் , மன்னார் நகர சபை யின் செயலாளர்,நகர சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், அரச,தனியார் போக்குவரத்து சங்கப் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ள நிலையில் சுகாதார முறைப்படி அரசின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக குறித்த பேருந்து நிலையம் திறந்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்-மன்னார் செய்தியாளர்)

# பாரிய புள்ளிச் சுறாமீன் காயங்களுடன் கரையொதுங்கியது

(சென்னை)

இராமநாதபுரம் கடற்கரையில் 18 அடி நீளமும் 700 கிலோ நிறையும் கொண்ட புள்ளி சுறாமீன், உடலில் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

பாக்ஜல சந்தி பகுதியான ஆற்றங்கரை கடற்கரையில் பிரமாண்ட மீன் ஒன்று கரை ஒதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை தொடர்ந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வனத்துறையினர் அங்கு சென்று பார்வையிட்டபோது, வேல்ஸார்க் எனப்படும்



அரியவகை சுறாமீன் உடலில் காயங்களுடன் இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளமை தெரியவந்தது. (2-5)

# மணல் கொள்ளையின் கொடூரம் சொந்த நிலங்களைப் பார்வையிடத் தடை

## பொலிஸ்-அதிரடிப்படையினரின் வருகையுடன் நிலைமை சுமுகம்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியிலுள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் வெளி மாவட்டத்தில் வசிப்பதை சாதகமாகப் பயன்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

இதனை தடுக்கும் நோக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வெளிமாவட்டங்களிருந்து தமது சொந்த நிலங்களில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்விற்கு தீர்வு காண வேண்டுமெனவும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்காட்ட வேண்டுமென்றும் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது சிலர் மக்களை வயலுக்குச் செல்ல விடாதபடி வீதிகளில் டயர்கள் எரியூட்டியதுடன் மக்களுக்கு அச்சம் ஏற்படக் கூடிய வகையில் செயற்பட்டனர். இதன்போது எரியூட்டப்பட்ட டயரினை அப்புறப்படுத்திய பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தினர்.

அத்தோடு சிறப்பு அதிரடிப் படையினரும் மக்கள் பாதுகாப்பிற்காக வரவழைக்கப்பட்டனர். இதில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் வயல் நிலங்களை உரிமையாளர்கள்



பார்வையிடப்பட்டனர்.

2 அடி ஆழம் வரை சில வயல் நிலங்களில் மணல் அகழப்பட்டதுடன் மீள விவசாயச் செய்கை மேற்கொள்வதாயின் மீண்டும் மணல் போட வேண்டியுள்ளதாகவும் வயல் உரிமையாளர்கள் தெரிவித்தனர். இம் மணல் அகழ் விற்கு தமக்கு ஓர் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டனர். இம் மணல் அகழ்ந்தவர்களின் விபரங்களுடனான மக்கள் கையொப்பம் தருமபுர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (2-5-316)


யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் உதவி அதிபராக கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.செல்வதிசைநாயகம் சிவநாயகம் அவர்களின்

**வாழ்த்துப்பா**

முக்கனிகள் உதிரும் முது நிலத்தின் சொத்தாய்
வித்தகர்கள் அவதரித்த மந்துவிலில் தோன்றி
எக்கணமும் துயராது பணி செய்து-சாவ இந்து
ஆரம்பத்திலோர் இனிய ஆசான் அறுபதின்
இக்கரையைத் தொட்டதனால் ஓய்வு கண்டார்.
காண்மின் சிவ நாயக மெனும் மென் குருவை
இக்கணத்தில் எல்லோரும் வாழ்த்துகின்றோம்
ஓய்வினிலே இனிமை காண்பீர்

முப்பது ஆண்டுக்கு மேலான சேவையை
முழுமனதாய்க் கொடுத்தவரே வாழ்க
இப்பதியும் தும்பணியால் பெருமை பெற
நற்குணத்தால் உயர்ந்தவரே வாழ்க
அப்புறமும் புகழ் நீளும் நும்பெயர் நீளும்
சத்தமின்றி வாழ்ந்திருந்த சாத்வீக பெருமகனே வாழ்க
செப்பரிய பண்பு மிகு செம்மலே நீர்
இப்புவியில் நீடூழி வாழ்ந்திடுவீர் வாழ்க

ஆரம்ப பாடசாலை அதிபர் கடமையிலே
சீரான பணியதனை சிறப்புடனே செய்தீர்
பேரன்பு உடையவராய் பிள்ளைகளை அணைத்தீர்
பெருமனதுடையவராய் கடமையிலே பிணைந்தீர்
ஊரவர்கள் போற்றும்படி உயர்ந்த பணி செய்தீர்
உண்மையால் உழைத்துப்பல சாதனைக்கு வித்திட்டீர்
சோராத சேவையினால் பேருயர வைத்தீர்- பள்ளி
மேலாக உயர்ந்து என்றும் உமை வாழ்த்திடும்.

"ஆசிரியர் சகோதரத்துவம்"
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி.

**சேவை நயப்புப் பத்திரம்**

**திரு.செல்வதிசைநாயகம் சிவநாயகம்**

Sp.Trained-primary Edu.SLTS-1



**சேவை விபரம்**

யா/மந்துவில் றோ.க.த.க.
பாடசாலை
[28.11.1989-02.02.1993]
ஆசிரியர் பயிற்சிக்
கலாசாலை
[03.02.1993-31.12.1994]
யா/மீசாலை விக்கினேஸ்
வரா மகா வித்தியாலயம்
[01.01.1995-14.02.2010]
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்ப பாடசாலை
[15.02.2010-08.06.2020]

எமது பாடசாலையில் நீண்டகாலமாக சேவையாற்றி ஓய்வு பெறும் உதவி அதிபர் அவர்களின் மணிவிழா வாழ்த்துக் களை வழங்குவதில் உள்ளம் மகிழ்கின்றோம்.

(சி-9678)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

12

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



## இரண்டாவது தேசிய அரசுப் பேரவை மற்றும் முதலாவது பாராளுமன்றம்

**பிரதமர்**
**1977 ஜுலை 23- 1978 பெப்ரவரி 04**
**ஜே.ஆர்.ஜெயவர்த்தன**



**பிரதமர்**
**1978 பெப்ரவரி 06- 1989 ஜனவரி 02**
**ஆர். பிரேமதாஸ**



2015 மார்ச்சில் தேசிய அரசாங்கம் ஒன்றை அறிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் முக்கிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரை அமைச்சரவையில் சேர்த்தார்.

தனது தேர்தல் அறிக்கையில் மைத்திரிபால சிறிசேன 100 நாள் வேலைத்திட்டத்தை அறிவித்து, அதன் பின்னர் பாராளுமன்றம் 2015 மார்ச் 27 இல் கலைக்கப்படும் என உறுதியளித்திருந்தார். தனது 100 நாள் திட்டத்திற்கு அரசில் இருந்த மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களின் பலத்த எதிர்ப்பை அவர் எதிர்கொண்டார். ஆனாலும், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவும், பதவிக்காலத்தை இரண்டு தவணைகளுக்குக் குறைக்கவும் வழிவகுக்கக்கூடிய 19ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தில் மூன்றில்-இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினார். மைத்திரிபால சிறிசேன 2015 ஜுன் 26 அன்று பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2015**

2015 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 15ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இத் தேர்தல் 2015 ஒகஸ்ட் 17 இல் நடைபெற்றது. தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் 2015 ஜுலை 6 முதல் 13 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பாராளுமன்றத்தின் 196 இடங்களுக்கு 21 பதிவு செய்யப்பட்ட கட்சிகளில் இருந்து 3,653 பேரும், சுயேட்சைக் குழுக்களில் இருந்து 2,498 பேரும் போட்டியிட்டனர். 12 கட்சிகள், 24 குழுக்களின் வேட்பு மனுக்கள் தேர்தல் ஆணையாளரினால் நிராகரிக்கப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியன அனைத்து 22 மாவட்டங்களிலும் போட்டியிட்டன.

ஜாதிக ஹெல உறுமய கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் (ஐ.தே.க.) இணைந்து நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் கூட்டணி அமைத்தது. இக்கூட்டணி அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாமையால் ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டது. இக்கூட்டணியில் இடதுசாரிக் கட்சிகளில் இருந்து பிரிந்து சென்ற ஐக்கிய இடது முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சில மூத்த அமைச்சர்கள் (ராஜித சேனாரட்ன, அர்ஜுன ரணதுங்க, சரத் அமுனுகம) ஆகியோரும் இடம்பெற்றனர். இலங்கையின் முக்கிய முஸ்லிம் அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் தனித்து "மரம்" சின்னத்திலும், புத்தளம், களுத்துறை, அம்பாறை, குருநாகல், கண்டி, கம்பஹா, திருகோணமலை மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் "யானை" சின்னத்திலும் போட்டியிட்டது.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி ஐ.தே.கவின் யானைச் சின்னத்தின் கீழ் கொழும்பு, நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கம்பஹா மாவட்டங்களில் போட்டியிட்டது. பௌத்த மதவாத இயக்கமான பொதுபல சேனா பொது சன பெரமுன என்ற புதிய கட்சியை அமைத்து அனைத்து மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட்டது.மக்கள் விடுதலை முன்னணி, சரத் பொன்சேகா தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி ஆகியன தனித்துப் போட்டியிட்டன.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் சேர்ந்து போட்டியிட்ட கட்சிகளாவன, ஐக்கிய தேசியக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, முஸ்லிம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி (ஜனநாயக மக்கள் முன்னணி,தொழிலாளர் தேசிய ஒன்றியம், மலையக மக்கள் முன்னணி ஆகியவை) ஐக்கிய இடது முன்னணி ஆகிவையாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் சேர்ந்து போட்டியிட்ட கட்சிகளாவன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பிரஜைகள் முன்னணி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், லிபரல் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, தேசிய காங்கிரஸ், தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, சோசலிசக் கூட்டணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடது முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, தேசிய விடுதலை மக்கள் கட்சி, இலங்கை மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஐக்கிய பிரஜைகள் முன்னணி என்பனவாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து போட்டியிட்ட கட்சிகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம் என்பனவாகும்.

பௌத்த மக்கள் முன்னணியில் சேர்ந்து போட்டியிட்ட கட்சிகள் பொது பல சேனா மற்றும் ஐக்கிய இலங்கை பாரிய பேரவை ஆகியவையாகும். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி என்ற பெயரில் போட்டியிட்டது.

2015 ஜுன் 29 அன்று ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவர் இரத்தினபுரி மாவட்டம், நிவித்திகலையில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அநுராதபுரம், குருநாகல், மகியங்கனை, வெலிகம ஆகிய இடங்களில் ஐ.தே.க, ஐ.ம.சு.கூ. ஆதரவாளர்களுக்கிடையே கைகலப்புகள் இடம்பெற்றன. 2015 ஜுலை 31இல் கொட்டாஞ்சேனையில் ஐ.தே.க. வேட்பாளரும் அமைச்சருமான ரவி கருணாநாயக்க கலந்து கொண்ட கூட்டம் ஒன்றை நோக்கி இரண்டு வாகனங்களில் வந்த நபர்கள் துப்பாக்கியால் சுட்டதில் ஒரு பெண் உட்பட இருவர் கொல்லப்பட்டனர்.

2015 ஒகஸ்ட் 15 ஆம் திகதி அன்று மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடி வீதி ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி 45.66% வாக்குகளுடன் 106 இடங்களைக் கைப்பற்றி முதலாவதாக வந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 42.38% வாக்குகளுடன் 95 இடங்களைக் கைப்பற்றியது. ஐ.தே.க. தலைமையிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைக்க 7 இடங்கள் தேவையாக இருந்தது. 2015 ஒகஸ்ட் 20 ஆம் நாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இரண்டு ஆண்டுகளுக்கு தேசிய அரசு அமைக்க ஒப்புக் கொண்டது. ரணில் விக்கிரமசிங்க 2015 ஒகஸ்ட் 21 ஆம் திகதி இலங்கையின் 22ஆவது பிரதமராகப் பொறுப்பேற்றார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஐ.தே.க.பொதுச் செயலர் கபீர் ஹாசிம் ஆகியோர் கையெழுத்திட்டனர். இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 இடங்களையும் கைப்பற்றின. மீதியான எட்டு இடங்களையும் மக்கள் விடுதலை முன்னணி (6), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (1), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (1) ஆகியன கைப்பற்றின.

**இலங்கை அரசியலமைப்பு நெருக்கடி 2018**

இலங்கையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததை அடுத்து ஆரம்பமானது.இதனையடுத்து நாட்டில் இரண்டு பிரதமர்கள் உள்ள நிலை ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனம் சட்டவிரோதமானது எனக் கூறி பதவி விலக மறுத்துவிட்டார்.

ஜனாதிபதியின் இந்தத் திடீர் முடிவு பெரும் அரசியல் கொந்தளிப்பை நாட்டில் ஏற்படுத்தியதோடல்லாது, பன்னாட்டு சமூகத்தின் விமர்சனத்துக்கும் உள்ளானது. ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள், மற்றும் எதிர்க்கட்சிகள் ராஜபக்ஷவின் நியமனத்தை இலங்கை அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி ஏற்றுக் கொள்ளவில்லை.

(தொடரும்)

# எமது ஆலோசனைகளை அலட்சியம் செய்ததால்

# நாடு இன்று இந்த நிலையில் நிற்கிறது

## ரணில் சுட்டிக்காட்டு



**(கொழும்பு) எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளை அரசாங்கம் அலட்சியம் செய்ததன் காரணத்தினாலேயே, இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஐ.தே.கவின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்ட காலத்திலிருந்து, எதிர்க்கட்சிகள் சம்பிரதாய அரசியலைக் கைவிட்டு, கொரோனாச் சவாலை முறியடிக்க ஒத்துழைக்க தயாராக இருந்தன.

பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் எதிர்க்கட்சிகளும் இவ்வாறான செய்தியைத்தான் அந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு வழங்கியிருந்தன.

இந்த நிலையில், நாம் அரசாங்கத்திடம் ஒரே ஒரு கோரிக்கையைத் தான் முன்வைத்தோம். அதாவது, ஒரு நாளைக்கு மேற்கொள்ளும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை 5 ஆயிரமாக உயர்த்துமாறு கோரியிருந்தோம்.

மார்ச் 24 ஆம் திகதி அலரி மாளிகையில் கட்சித்தலைவர்களின் கூட்டம் நடைபெற்ற போதே இந்த கோரிக்கையை நாம் முன்வைத்திருந்தோம். அப்போது, இலங்கையில் 102 கொரோனாத் தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டிருந்தார்கள். ஒரு மரணம் கூட பதிவாகவில்லை.

ஆனால், இன்று நிலைமை அவ்வாறு இல்லை. இதற்கு என்ன காரணம்? அரசாங்கம் எமது கருத்துகளைச் செவிமடுக்கவில்லை. இதன் விளைவாகத் தான் இந்த நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4-5)

# மேல் மாகாணத்தில் விசேட சுற்றிவளைப்பு போதைப்பொருட்களுடன் 381 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருட்களுடன் 381 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்று அதிகாலை 5 மணி வரை இச்சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஹெரோயினுடன்122 பேரும் கஞ்சாவுடன் 63 பேரும் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானங்களுடன் 110 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (2-8)

## பி.சி.ஆர்.பரிசோதனை 76 ஆயிரத்து 957

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் எண்ணிக்கை 77 ஆயிரத்தை அண்மித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 718 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் இதுவரை 76 ஆயிரத்து 957 இற்கும் அதிகமான பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-4-5)

# தேர்தல் கண்காணிப்பு பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக சுமார் 100 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் தேர்தல் தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், மற்றுமொரு பகுதியினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையத்தின் இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். (ஜ-4-5)

# 508 கடற்படையினர் குணமடைந்தனர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் குள்ளான கடற்படையினரில் மேலும் 20 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த 508 கடற்படையினர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் 1,835 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 883 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன் 70 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும் (ஜ-5)

## நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றின் காரணமாக பொருளாதார ரீதியான பாரிய சிரமங்களுக்கு உள்ளான அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையாளர்கள் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அகில இலங்கை அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையாளர்கள் சங்கத்தினரால் விடுக்கப்பட்ட இக்கோரிக்கையில் கொரோனாவின் கோரத்தினால் நாம் வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம். எனவே எமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஜ-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## என்ன எதிர்பார்க்கிறார்கள்?

ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய உறவினர் ஒருத்தர் ஒரு நேர்முகத் தேர்வுக்குப் போயிருந்தாராம்.

ரொம்பவும் பொறுப்பாகவும் கவனமாகவும் செயற்பட வேண்டிய பதவிக்கான நேர்முகத் தேர்வு அது. இவரிடம் நிறைய மார்க் இருந்தது. ஏராளமான சான்றிதழ்களும் இருந்தன. நேர்முகத் தேர்விலே கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் ரொம்பவும் சரியாக பதில் சொல்லி விட்டார்.

இருந்தாலும் அந்த நேர்முகத் தேர்விலே அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று பின்பு விசாரித்த போது தான் விபரம் தெரிந்ததாம். இந்த நேர்முகத் தேர்விலே இவர் நடந்துகொண்ட முறையிலே சில தவறுகள் நடந்து போனதாம். முக்கியமா இரண்டு தவறுகள்.

ஒன்று அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள்ளேயே இவர் பதில் செர்ல்ல ஆரம்பித்து விட்டாராம். இரண்டாவது இவர் நாற்காலியிலே தாராளமாக relax ஆக உட்காராமல் நாற்காலி முனையிலே உட்கார்ந்திருந்தாராம்.

இந்த இரண்டு விதமான செயற்பாடுகளும் இவர் அவசரப்படுகிறவர், பதற்றப்படுகிறவர் என்பதற்கான அடையாளங்களாம்.

பார்க்கப் போற வேலைக்கு அவசரம், பதற்றம் இவை இரண்டும் இருக்கக் கூடாதாம். அதனாலேயே மார்க் இருந்தும் சான்றிதழ்கள் இருந்தும் அந்த வேலைவாய்ப்பு அவருக்கு கிடைக்கவில்லை. வேலை கொடுக்கிறவர்கள் நம்மிடம் இருந்து என்னதான் எதிர்பார்க்கிறார்கள் என்பதை தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

அதை ஒவ்வொன்றாக இப்ப பார்க்கலாம். முதலிலே தொடர்பு கொள்ளும் திறமை. Ability to communicate நீங்கள் நினைக்கிறதை அழகாக தொகுத்து வகைப்படுத்திச் சொல்லத் தெரியுதா? என்று பார்ப்பார்கள்.

இரண்டாவது புத்திசாலித்தனம் (Intelligence) ஏற்றுக் கொள்ளப்போகும் வேலையை நல்ல விதமாக செய்ய முடியுமா உங்களாலே? அதை எந்தெந்த வழியிலே செய்யலாம் என்பத உங்களாலே தீர்மானிக்க முடியுமா? அந்த வேலைக்கான புதுப்புது யோசனைகளை உங்களாலே சொல்ல முடியுமா? என்று பார்ப்பார்கள்.

மூன்றாவது தன்னம்பிக்கை (Self confidence) உங்களுக்கு இருக்கிறதா என்று பார்ப்பார்கள். எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டும். எப்படிப்பட்ட மனிதர்களையும் சமாளிக்கிற தைரியம் வேண்டும். அடுத்தவர்களை நமக்குச் சாதகமாக திருப்பக் கூடிய தன்னம்பிக்கை வேண்டும்.

நான்காவது பொறுப்புக்களை முன்வந்து ஏற்றுக் கொள்ளுதல் (Willingness to accept responsibility) பொறுப்புக்களிலிருந்து நழுவிப் போக ஆசைப்படாமல் செய்து முடிக்க வேண்டும். ஐந்தாவது முன்வருதல் Initiative வேலையினுடைய முக்கியத்துவம் உணர்ந்து அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை தயங்காமல் எடுக்க முன் வரவேண்டும்.

ஆறாவது தலைமைத்துவம் (Leadersip) நாலுபேருக்குத் தலைமை தாங்கி நல்லவிதத்திலே நடந்துகொள்ளத் தெரிகிறதா?

ஏழாவது கற்பனைத்திறன் (Imagination) சில பிரச்சினைகள் வரக்கூடும் என்று முன்கூட்டியே யூகிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கிற திறமை உண்டா என்று பார்ப்பார்கள்.

எட்டாவது வளைந்து கொடுத்தல் (Flexibility) சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி, மாற்றங்களுக்குத் தகுந்த மாதிரி அனுசரித்து நடந்து கொள்ளத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள்.

அடுத்தது திறமைகளை வெளிக்கொணரும் திறமை (Inter personal Skills) அடுத்தவர்களிடம் இருக்கிற திறமையைக் கண்டுபிடித்து அதை நல்லவிதத்திலே ஊக்கப்படுத்தி பயன்படுத்தத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள்.

அடுத்தது சுய அறிவு (Self Knowledge) அடுத்தவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை நம்மாலே புரிந்து கொள்ள முடியாதா என்பது முக்கியம்.

அடுத்தது போட்டி மனப்பான்மை (Competitiveness) அடுத்தவர்களை ஒப்பிட்டுப் பார்த்து அதைவிட ஒருபடி மேலே வரவேண்டும் என்கிற குணம் வேண்டும். அடுத்தது குறிக்கோளை வெல்லுதல் (Goal Achievement) குறிக்கோளை சவாலாக எடுத்துக்கொண்டு அதை அடைய வேண்டும். பின்பு வேறுபட்ட திறமைகள் (Vocational Skills) பதவிக்கு வேண்டிய திறமைகள் தவிர மற்ற திறமைகள் ஏதும் உண்டா என்பதும் முக்கியம்.

நமக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் நம்மிடமிருந்து இவ்வளவும் எதிர்பார்ப்பார்கள். அதற்குத் தகுந்த மாதிரி நம்மை நாமே தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் ஒரு நேர்முகத் தேர்வுக்குப் போய்விட்டு வந்தார். "எப்படி இருந்தது நேர்முகத் தேர்வு" என்று விசாரித்தேன்.

"நான் போனேன். அவர் கேட்ட எல்லா கேள்விக்கும் அவர் எதிர்பார்த்தது மாதிரியே எல்லா பதிலையும் சொன்னேன். கடைசியாக நான் எதிர்பார்க்காத ஒரு தகவலை அவர் சொன்னார்" என்றார். என்ன என்று கேட்டேன்.

"அவரும் என்னை மாதிரியே நேர்முகத் தேர்வுக்கு வந்தவர் தானாம். சும்மா என்னை கேள்வி கேட்டுக்கொண்டிருந்தாராம்" என்றார்.

வெற்றி என்பது இறுதி இலக்கு அல்ல. அது ஒரு பயணமே. பயணம் தொடர்ந்து கொண்டேதான் இருக்க வேண்டும். – ஆர்ஷெவிட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐ.நாவில் இருந்து விலகுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் நிபந்தனைகளிலிருந்து இலங்கை அரசாங்கம் விலகி விட்டது. எனவே ஜனாதிபதி செயலணி தொடர்பிலோ பாதுகாப்புத்துறை தொடர்பிலோ சர்வதேச சமூகம் எம்மிடம் கேள்வி கேட்க முடியாதென வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

ஈழத் தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசாங்கத்துக்கு முக்கியமான நிபந்தனைகளை விதித்து அவற்றை நிறைவேற்றுமாறு பணித்திருந்தது.

எனினும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குக் கால அவகாசம் தேவை எனக் கடந்த கால அரசாங்கம் கூறிவந்த நிலையில், அந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவுற்றுப்போக,

ஆட்சிப் பொறுப்பிலுள்ள தற்போதைய அரசாங்கமே ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

எனினும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடரில் வைத்து இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்புத் தொடர்பில் ஐ.நா சபை எதுவும் செய்ய முடியாதெனில், ஐ.நா சபையும் அதன் உப அமைப்புகளும் இயங்குவது அர்த்த மற்றதாகி விடும்.

மாறாக நிபந்தனைகளை நிறைவேற்றாமல் தாம் நினைத்தபடி விலகுவதற்கு ஐ.நா சபை ஒன்றும் ஊர்ச் சனசமூக நிலையமல்ல என்றால், உரிய நடவடிக்கையை ஐ.நா சபை எடுத்தாக வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது என்ற விடயத்தில் ஐ.நா சபை உட்பட உலக நாடுகளிடம் உறுதியான கொள்கைகள் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து ஒரு நாட்டின் அரசாங்கம் என்ற அதிகாரத் தகைமையுடன் அந்த அரசாங்கம் சிறுபான்மை இன மக்கள் மீது எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் அதனை அனுசரித்துப் போவதுதான் ஒரே வழி என்றால், மனித உரிமை அமைப்பு முதல் ஐ.நா சபை வரை எல்லாம் தேவையற்றதாகிவிடும்.

எதுவாயினும் இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது அராஜகம் நடக்கும் போது அதனை ஐ.நா சபை வெறுமனே பார்த்திருந்ததன் விளைவாகவே இன்று இலங்கை அரசாங்கம் **விலகுதல்** என அறிவிப்பதற்குக் காரணமாயிற்று.

தவிர, நாங்கள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இருந்து – இணை அனுசரணையில் இருந்து விலகிவிட்டோம்.

எனவே இனி எங்களிடம் எவரும் கேள்வி கேட்க முடியாது என்று ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார் எனில்,

ஐ.நாவினதும் வல்லரசுகளினதும் அமைதி எவ்வளவு பலயீனமாகப் பார்க்கப்படுகிறது **என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.**

# வெளிநாட்டு இராஜதந்திரிகள் எவருக்கும் சிறப்புச் சலுகையை அரசு வழங்கவில்லை

## யாரென்றாலும் எமது கட்டுப்பாட்டிற்கு கட்டுப்பட்டேயாக வேண்டும்

### வெளிவிவகார அமைச்சர் பளீர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள பாதுகாப்பு, சுகாதார நடவடிக்கைகளை நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும். வெளிநாட்டு இராஜதந்திரிகள் எவருக்கும்தற்போதைய நிலையில் சிறப்பு சலுகை வழங்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விமான நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனையை நிராகரித்த அமெரிக்க இராஜதந்திரி தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படுகின்றன. அரசாங்கம் அமெரிக்காவிற்கு சிறப்புச் சலுகையினை வழங்க வேண்டிய தேவை கிடையாது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாட்டுக்குள் வரும் வெளி நாட்டு இராஜதந்திரிகள் மற்றும் தூதுவர்கள் கடுமையாக பின்பற்ற வேண்டும் என இலங்கையிலுள்ள அனைத்து தூதுவராலயங்களுக்கும் விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டில்தற்போது செயற்படுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

வெளிநாட்டு இராஜ தந்திரிகள் மாத்திரம் விதிவிலக்கல்ல. அரசாங்கம் எத்தரப்பினருக்கும் சிறப்பு சலுகை வழங்காது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-5)

## பரீட்சைகள் நடத்துவது தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்று

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை, தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றை நடத்துவது தொடர்பிலான இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ள நிலையில் இது தொடர்பில் இன்றைய தினம் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதுடன் உரிய விதிமுறைகளுக்கமைய பரீட்சைகள் நடத்துவது தொடர்பில் தீர்மானம் எட்டப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (2-8)

## ஊரடங்கை மீறிய 84 பேர் கைதாகினர்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் ஊரடங்கை மீறிய 71 ஆயிரத்து 326 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு அவர்கள் பயணித்த 20 ஆயிரத்து 310 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை 26 ஆயிரத்து 160 பேருக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-8)

## இடர்கால கொடுப்பனவு; 40 இலட்சம் பேர் பயனடைவு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளில் சுமார் 40 இலட்சத்துக்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டமாக 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு கிடைக்கப் பெறாதவர்களுக்கு இவ்வார இறுதிக்குள் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் பந்துலஸ்ரீ தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று காரணமாக ஜீவனோபாயத்தை இழந்த அனைவருக்கும் நிவாரணம் வழங்கும் வகையில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் கட்டம்கட்டமாகவழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திருக்க வேண்டாம்; அது, எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக் கோட்டையாக இருக்கட்டும். -நீட்சே**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒருபகுதி, பகல அளுத்வத்த கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், சூடுவெந்தபுலவு கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** இசைமலைத்தாழ்வு, கொக்குபடையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக் கட்டி, முள்ளிக்குளம், கரடிக் குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### வாழ்வின் தொடக்கம்



கருத்து அல்லது எண்ணத்தைவிட எல்லையில்லாத அளவு உயர்ந்த நிலை ஒன்றில்லையா? ஒளியின் அதிர்வுகள் மிக குறைவாக இருக்கும் போது நாம் ஒளியை காண்பதில்லை. அதிர்வுகள் சற்று அதிகரிக்கும் போது ஒளி நம் கண்களுக்கு புலனாகிறது. அவை இன்னும் அதிகரித்தாலும் நாம் ஒளியை காண முடிவதில்லை. அது நமக்கு இருளாகி விடுகிறது. இறுதியில் நிலவிய இருளும் முதலில் நிலவிய இருளும் ஒரே மாதிரியானவையா? இல்லவே இல்லை. இரண்டும் இரு துருவங்கள். கல்லின் எண்ணமற்ற நிலையும் கடவுளின் எண்ணமற்ற நிலையும் ஒன்றா? அப்படி எதுவும் இல்லை.

கடவுள் சிந்திப்பதுமில்லை, அவர் ஆராய்வதும் இல்லை. அவர் ஏன் ஆராய வேண்டும். ஆனால் அவர் அறியாதது ஏதாவது உண்டா? அப்படி ஏதாவது இருந்தாலல்லவா ஆராய்ந்து அறிய வேண்டும். கல் ஆராய முடியாது கடவுள் ஆராய்வதில்லை. இதுதான் கல்லுக்கும் கடவுளுக்கும் உள்ள வேறுபாடு.

ஆராய்ச்சி அறிவிற்கு-தர்க்க அறிவிற்கு மேலாக எவ்வளவோ உயர்ந்த நிலைகள் உள்ளன. உண்மையில் ஆன்மீக வாழ்க்கையின் முதற்படி புத்திக்கு அப்பால்தான் இருக்கிறது. எண்ணத்தையும் புத்தியையும் ஆராய்ச்சியையும் கடக்கும் போதுதான் கடவுளை நோக்கி முதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள். அதுதான் வாழ்வின் தொடக்கம். சாதாரணமாக நாம் **வாழ்வு என்பது வெறும் கரு நிலையையே.**

# பொலிஸ் காவலில் வைக்கப்பட்ட இளைஞன் உயிரிழப்பு;

# கொந்தளித்த மக்களால் கொளுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரி!

(மெக்சிகோசிட்டி)

**பொலிஸ் அதிகாரி ஒருவரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உயிருடன் கொளுத்திய சம்பவம் மெக்சிக்கோவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸ் காவலில் இருந்த இளைஞன் ஒருவன் அடித்துக் கொல்லப்பட்டதற்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலேயே இக்கொடூரச் செயல் நடைபெற்றுள்ளது.**





மெக்சிகோவின் குவாடலஜாரா பகுதியில் கட்டடத் தொழிலாளியான இளைஞர் முகக்கவசம் அணியாததன் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், மரணமடைந்தார். மக்கள் அவர் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்ததாக தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு மெக்சிக்கோ நாட்டில் பொலிஸ் காவலில் இருந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு அடித்துக்கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.


இந்த விவகாரம் அப்பகுதியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன், கொல்லப்பட்ட இளைஞருக்கு நீதி கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சம்பவத்தன்று ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் அதிகாரி மீது ஒருவர் எரியக்கூடிய திரவத்தை ஊற்றியுள்ளார். அதன் பின்னர் அவர் மீது நெருப்பு வைத்துள்ளார். தீப்பற்றிய நிலையில் பொலிஸ் அதிகாரி உடனடியாக தரையில் விழுந்து தற்காத்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இதன்போது அருகில் இருந்த ஏனைய பொலிஸ் அதிகாரிகள் தீக்காயங்களுக்குள்ளான அதிகாரியை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொதுமக்களில் 26 பேரை கைது செய்துள்ளதாக மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (2-5)

## இன வெறிக்கு எதிரான போராட்டம் சொந்தக் கட்சியிலே ட்ரம்பிற்கு எதிர்ப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் இனவெறிக்கு எதிரான போராட்டங்களை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையாளும் விதம் குறித்து சொந்தக் கட்சிக்குள்ளேயே கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது. முன்னாள் உட்துறை செயலாளர் காலின்பவெல், டொனால்ட் ட்ரம்ப்பின் போக்கு குறித்து கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 'போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தை அழைப்பேன் என கூறியது தவறானது. நம்மிடம் அரசியலமைப்பு சட்டம் உள்ளது. அதை நாம் பின்பற்ற வேண்டும். ஆனால், ட்ரம்ப் அதில் இருந்து திசை மாறிச்செல்கிறார்' எனத் தெரிவித்தார். (2-5)

## 75 நாட்களின் பின் வழிபாட்டுத் தலங்கள் திறப்பு

### தனிமனித இடைவெளியுடன் பக்தர்கள்

(டில்லி)

ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் 75 நாட்களுக்கு பிறகு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வழிபாட்டுத் தலங்கள் திறக்கப்பட்டு பக்தர்கள் வழிபடத் தொடங்கியுள்ளனர். கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த மார்ச் மாதத்திலிருந்து அனைத்து வழிபாட்டுத் தலங்களும் மூடப்பட்டன.

இந்நிலையில், பல்வேறு கட்டுப்பாடுகளைத் தளர்த்தி நேற்று திங்கட்கிழமை முதல் வழிபாட்டுத்தலங்களை திறக்க மத்திய அரசு அனுமதி அளித்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று வழிபாட்டுத் தலங்கள் திறக்கப்பட்டன. பக்தர்கள் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து வழிபாடு செய்தனர். வழிபாட்டுத் தலங்களில் வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2-5-8)

## போர்க்களமான அமெரிக்க நகர்களை தனி ஒருவனாய் தூய்மைப்பணி செய்த இளைஞன்

### குவியும் பாராட்டுக்களும் பரிசுகளும்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் போராட்டத்திற்குப் பின் தெருக்களில் தேங்கியுள்ள குப்பைகளைத் தாமாக களமிறங்கி தூய்மைப்படுத்திய இளைஞரை பலர் பாராட்டியதுடன், அவருக்கு கார், கல்வி உதவித்தொகையையும் பரிசாக அளித்துள்ளனர்.

அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ்பிலாய்டின் கொலைக்கு நீதி கேட்டு போராட்டம் நடைபெற்று வருகிறது.

பல இடங்களில் போராட்டக்காரர்கள்-பொலிஸார் இடையே மோதல் வெடிப்பதால் வன்முறைக் களமாக மாறியுள்ளது.

போராட்டக்காரர்கள் போத்தல்கள், பதாகைகளை பொலிஸார் மீது வீசுவதால் தெருக்கள் குப்பைக்களமாக காட்சியளிக்கின்றன.



நியூயோர்க்கின் பப்பலோ நகரை சேர்ந்த 18 வயது மதிக்கத்தக்க இளைஞரான அன்டோனியோ க்வின் ஜூனியர் வித்தியாசமாக செயற்பட முடிவெடுத்தார்.

துடைப்பம் மற்றும் குப்பை அள்ளும் பைகளைக் கொண்டு வந்து, தெருக்களைச் சுத்தம் செய்யத் தொடங்கினார்.

கடந்த திங்களன்று அதிகாலை 2 மணிக்குத் தொடங்கி 10 மணி நேரம் தொடர்ந்து தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டார்.

அன்டோனியோவின் பெயரும், பொறுப்புணர்வும் குறித்து செய்திகள் பல தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகின.

இதனைத்தொடர்ந்து பலரும் அன்டோனியோவுக்கு தங்களால் இயன்ற உதவியை செய்ய முன்வந்துள்ளனர்.

அதே பகுதியை சேர்ந்த மாட் பிளாக் என்பவர் தனது சிவப்பு நிற முஸ்டாக் காரை க்வினுக்கு பரிசாக அளித் துள்ளார்.

மற்றொரு தொழிலதிபர் ஒருவர் ஒருவருடத்திற்கு இலவச காப்பீடு அளிப்பதாகவும், பப்பலோ நகரத்தில் உள்ள கல்லூரி நிர்வாகம், க்வினுக்கு புலமைப் பரிசில் வழங்குவதாகவும் அறிவித்தனர். (2-5)

## ஹெலியிலிருந்து...

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஆலய உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் ஆலய வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியாது என குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆலயத்தை சூழ இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதோடு நூற்றுக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளதோடு, வீதித் தடைகள் போட்டு ஆலயத்திற்கு வருபவர்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைக்ள் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

எனினும் ஆலயத்துக்கு வருகைதந்த பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு மக்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று மாலை 5மணிக்கு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு ஹெலி மூலம் விமானப்படையினர் மலர் தூவியுள்ளனர். (ம-3,281)

## தேர்தல் சுயாதீன...

பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளில் ஆணைக்குழு மந்தகரமாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொதுத்தேர்தலை விரைவாக நடாத்த தற்போது எவ்வித தடைகளும் கிடையாது.

தேர்தலை நடாத்துவதற்கு எதிராக எதிர்த்தரப்பினர் முன்னெடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது தோல்வியடைந்துள்ளன. தேர்தலை விரைவாக நடாத்த வேண்டும் என்ற நோக்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் உள்ளதா என்ற சந்தேகம் உள்ளது என்றார். (ம-3)

## ஓகஸ்ட் 8 இல்...

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நடைபெற அதிக வாய்ப்பு உள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவிலிருந்து நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள வெளியாகியுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி நாளை புதன்கிழமை வெளியாகவுள்ளது. மேலும் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்களை உள்ளடக்கிய வர்த்தமானி இன்று வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-3)

## இம்மாத இறுதிக்...

பாடசாலைகள் மீள ஆரம்பிப்பதற்கு முன்னர், உடல் வெப்ப நிலையை அளவிடும் கருவிகளை பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. 16,000 உடல் வெப்பநிலை அளவிடும் கருவிகள் கோரப்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தை பெறும் நிறுவனம், முதல் கட்டமாக ஒரு வாரத்தில் 8,000 கருவிகளையும், அடுத்த வாரத்தில் மிகுதி 8,000 கருவிகளையும் வழங்க வேண்டும்.

இதேவேளை, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக, மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து கல்வியமைச்சின் அதிகாரிகளும், போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளும் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர். (ம-3)

## மயங்கி விழுந்த...

தொடருந்துப் பாதைகளை சீரமைத்து சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய யாழ்ப்பாணத்தின் தொடருந்துப் பாதைகளும் தனியார் ஒப்பந்ததாரர்களால் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நடவடிக்கை நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது பணியாற்றிக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை மயங்கி வீழ்ந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்தவர் குருநகரைச் சேர்ந்த 37 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான றெஜினோல்ட் என தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உயிரிழந்தவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9,114)

## யாழிலிருந்து சென்ற இந்தியருக்கு...

இந்தியாவிலிருந்து வந்து இணுவிலில் தங்கியிருந்த ஒருவர், கடந்த 31ஆம் திகதி இந்தியாவிற்கு மீள அழைத்து செல்லப்பட்டிருந்தார். அங்கு அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டதாக செய்தி வெளியாகியது.

இது குறித்து வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் வலம்புரி தொடர்பு கொண்டு கேட்டபோது,

புடவை வியபாரியொருவர் இணுவிலில் தங்கியிருந்தார். கடந்த 31ஆம் திகதி அவர் இந்தியா சென்றார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு தொற்று இருப்பதாக எமக்கு தகவல் ஒன்று வழங்கப்பட்டது.

அது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. அந்த தகவலை உறுதிசெய்யுமாறு இந்திய தூதரகத்தை கோரியுள்ளோம். தற்போது, இணுவிலில் 3 வீடுகள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (ம-3,114)

## பூநகரியில் விப...

கிளிநொச்சி பூநகரி பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த விபத்து நேற்று பிற்பகல் 2 மணியளவில் மன்னார் யாழ்ப்பாணம் பிரதான வீதியின் பூநகரி 4ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியை சேர்ந்த செல்வநாயகம் தவரஞ்சன் (வயது 41) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

அதே பகுதியை சேர்ந்த (வயது 41) என்ற செல்லத்துரை வசந்தகுமார் என்ற 4 பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100)

## மரத்திலிருந்து...

பகுதியில் உள்ள மரம் ஒன்றில் ஏறியநிலையில், தவறி வீழ்ந்துள்ளார்.

இதனால் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அங்கு கொண்டு செல்லும் முன்னரே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அன்ரன் அருள்நாதன் (வயது - 51) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மடுகந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,299)

## வவுனியாவில்...

அன்ரணி (வயது 35) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

சடலத்தை பார்வையிட்ட வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தார். (ம-3,299)

## கட்சி சார்பாக...

தனது பதவியிலிருந்து விலகி அதனை செய்ய முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த உத்தரவுகளை மீறும் அரச நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

## இவ்வாரத்துக்...

ஆணைக்குழு முன்னர் அறிவித்திருந்தது.

பொதுத்தேர்தலை ஜூன் 20ஆம் திகதியிலிருந்து புதிய திகதிக்கு ஒத்திவைப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பு புதன்கிழமை வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந் நிலையில் பொதுத் தேர்தல் திகதி குறித்த அறிவிப்பினை இந்த வாரத்திற்குள் வெளியிட தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, வேட்பாளர்களின் விருப்ப எண்ணை அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இளம் குடும்பப்...

இதில் குறித்த இளம் குடும்பப் பெண் எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மகாறம்பைக் குளம், ரம்பவெட்டி பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றுக்கும் அயல் குடும்பம் ஒன்றுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது இளம்குடும்ப பெண் ஒருவருக்கு மண் ணெண்ணை ஊற்றப்பட்டு தீ வைக்கப்பட்டு எரிந்த நிலையில், அயலவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 29 வயதுடைய இளம் குடும்ப பெண்ணே தீயில் எரிந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு தீ வைத்தது யார் என்பது தொடர்பில் மாமடு பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (ம-3,250,299)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1155
சீட்டிழுப்பு திகதி 08.06.2020 திங்கள்
M 16 42 48 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,137,560
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 944
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.06.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,966,375/-
வெற்றி இலக்கங்கள் 25 39 46 59 ஆங்கில எழுத்து I
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.04.20 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3322 திகதி: 08.06.2020 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் 48 60 61 65 ஆங்கில எழுத்து O
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 39,493,054/-
மோட்டார் வாகனத்தை வெற்றிப் பெற்ற வெற்றி இலக்கம் மற்றும் மாவட்டம்
9995706
அம்பாந்தோட்டை மாவட்டம்
ரூ.100,000/- பணப்பரிசிற்கு உரித்தான வெற்றி இலக்கம் 906030
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.04.04 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.06.2020 வெற்றி வாரம் 2825 வர்ணம் மஞ்சள்
ராசி இடபம்
வெற்றி இலக்கங்கள் 10 15 25 62
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,832,964
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 1 9 6 5
ரூ.100 பரிசுக்குரிய 4 8 9
2020.06.09ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

மஹஜன சம்பத
திகதி 2020/06/08
சீட்டிழுப்பு இலக்கம் 4148
ஆங்கில எழுத்து J வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 9 8 2 7 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2442
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 40 45 69 79
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 517
X 24 வெற்றி இலக்கங்கள் 22 30 52 56

அச்சுவேலிப் பகுதியில்

# வளர்ப்பு நாயைக் கடத்தி கப்பம் பெற்ற இளைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாயைக் கடத்திச் சென்ற இருவர் 25 ஆயிரம் ரூபாய் கப்பம் பெற்ற பின்னர் நாயை உரிமையாளர்களிடம் கையளித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி பகுதியில் வசித்து வரும் தம்பதியினர் "பொமேரியன்" இன நாய் ஒன்றினை மிகச் செல்லமாக வளர்த்து வந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர்களின் வளர்ப்பு நாய் வீட்டில் நின்ற நிலையில் திடீரென காணாமல் போயுள்ளது. அதனை அவர்கள் அயலில் தேடி அலைந்து எங்கும் கிடைக்காததால் மனமுடைந்திருந்தனர்.

நாய் காணாமல்போன அன்றைய தினம் மாலை அவர்கள் வீட்டுக்கு சற்று தொலைவில் வசிக்கும் இரு இளைஞர்கள் அவர்கள் வீட்டுக்கு வந்து உங்கள் நாயை ஒருவர் பிடித்து வைத்துள்ளார்.

அவருக்கு 25 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்தால் நாயை தருவதாக கூறினார். நாய் வேண்டும் என்றால் 25 ஆயிரம் ரூபாய் தாருங்கள் எனக் கேட்டுள்ளனர்.

தம்பதியினரும் அதற்குச் சம்மதித்து அவர்கள் கேட்ட பணத்தினை கொடுத்துள்ளனர்.

பணத்தினை பெற்றுச் சென்றவர்கள் அரை மணிநேரத்தில் அவர்களின் நாயை கொண்டு வந்து ஒப்படைத்து விட்டு சென்றனர்.

தம்மிடம் பணம் பெற்று சென்றவர்களே நாயை தமது வீட்டில் இருந்து பிடித்து சென்று பணத்தினை பெற்றுக் கொண்டு நாயை தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என தம்பதியினர் சந்தேகம் வெளியிட்டனர்.

அதேவேளை இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தால் தமது செல்லப்பிராணியான நாய்க்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடுமோ எனும் பயத்தில் அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யவில்லை. (ம-3)

# வீட்டுக்குள் மது விற்பனை மாது உட்பட இருவர் கைது

## சங்கானைப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அரச விடுமுறை நாளில் சட்டத்துக்குப் புறம்பாக மதுபானத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற உத்தியோகத்தர் இருவர் பணம் கொடுத்து மதுபானத்தை வாங்கிய பின்னர், அவ்விடத்தை சுற்றி வளைத்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதில் 65 வயதுடைய சங்கானையைச் சேர்ந்த பெண் ஒருவரும் 180 மில்லி லீற்றர் அளவுடைய 95 மதுபானப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 35 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

# கூட்டத்தில் அமைதியின்மை

## ரணில் வெளியேறினார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை சிறிகொத்தாவில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டதையடுத்து ரணில் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

பொதுத் தேர்தல் மற்றும் கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியதன் பின்னரே இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளதுடன் ரணில் விக்கிரமசிங்க கூட்டத்திலிருந்து வெளியேறினார். (ம-3)

ஐ.தே.கவிலிருந்து இடைநீக்கம்

# சஜித் தரப்பு தாக்கல் செய்த மனு நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இடைக்கால தடைகோரி இவ்வாறு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஊடாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்களை தாக்கல் செய்த 99 பேரை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்க அந்த கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீரமானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


**கணித பாட வகுப்புக்கள்**

தரம் 6 – 11 வரையான மாணவர்களுக்கு கணித பாடம் வீடு வந்து தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.
(கடந்த கால வினாப்பத்திரங்கள், மீட்டற் பயிற்சிகள் வழங்கப்படும்)

தொடர்புக்கு:- 075 777 7166
யாழ்ப்பாணம்
(2981)

**ஓலைச்சுவடி சோதிட நிலையம்**

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.
மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்
பண்டாரிக்குளம், வவுனியா.
076 328 7119
(2979)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
(C-9624)

**கனடாவில் உயர்கல்வி**
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்
IELTS, LIFESKILLS A1 மற்றும் GERMAN A1, DUTCH வகுப்புக்கள் மிகவிரைவில் ஆரம்பம்.
இலவச பதிவுகளுக்கு : 0779265447 (10am - 5pm)
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989
(C-9676)

**NCG Express**
அன்பார்ந்த எமது வாடிக்கையாளர்களே!



20.03.2020 அன்று நிறுத்தப்பட்டிருந்த எமது பேருந்து சேவையானது, இன்று முதல் (09.06.2020) வழமைபோல் இரவுச் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.
. வெள்ளவத்தை, மொரட்டுவ வரை எமது சேவை பயணிக்கும்.
புறப்படும் நேரம் யாழ்ப்பாணம் 9.00 பி.ப I கொழும்பு 9.00 பி.ப
(2984)
NCG EXPRESS
பயணத்தினை மேற்கொள்ளும் பயணிகளின் பாதுகாப்புக் கருதி முகக்கவசம் கட்டாயம் அணிந்து வரவும்
யாழ்ப்பாணம் 0775551533, கொழும்பு 0771075555

**JOB OPPORTUNITY**
TO JOIN CENTRE FOR CREATIVITY & INNOVATION (CCI)
**OFFICE MANAGER**

We are a non profit organisation to invent new education to promote creativity and innovation skills in Lanka. We are based in Palaly Road, Jaffna. We have established an innovation museum, research & invention centre and cycling club in order to fulfill our aim.

We are looking for an energetic, creative and multilingual person to join us as soon as possible. You will be welcoming and being a guide to everyone visiting us. This is a challenging position which requires IT skills, social media skills and ability to do multi tasks. You will be someone with, good sense of humour, willingness to learn new skills, good communication skills and go extra miles to serve our country through our organisation. You will also be doing general office duties, sell our products and services such as binding, copying etc. This is 5 days a week work during normal office hours. Salary in the range of RS25-30K. To apply to this position please send an email with, brief description of why you are interested in this position, what would you bring to this organisation, about you, with enclosing your CV.

Email: visionnext100@gmail.com
Telephone - 214341515 Mobile 757417332
(C-9649)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை
# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை

நேரம்: ஒரு மணித்தியாலம் 15 நிமிடம் வினாப்பத்திரம் - 02

01. பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

கடிகாரப் பறவைகளான சேவல்களும், க்கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து கதிரவனை வரவேற்றன. மலரும் மொட்டுப் போல மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் செல்கின்றனர். இரத்தினக் கற்கள் போல மின்னும் தொழிலாளர்கள் தமது வேலைக்கு விருப்புடன் செல்கின்றனர். கூட்டம் கூட்டமாகத் திரியும் பட்சிகளும் கணீர் கண்ணீர் என ஒலிக்கும் கண்டாமணி ஓசையும் சூழலை அழகுபடுத்துகின்றன.

1. கடிகாரப் பறவைகள் எவை?
.....................................................................
2. உவமை ஒன்று தருக.
.....................................................................
3. அடுக்குத்தொடர் ஒன்று எழுதுக.
.....................................................................
4. "தொழிலாளர்கள்" இதில் வந்துள்ள உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?
.....................................................................
5. நிகழ்கால பலர்பால் பன்மை வினைச்சொல் ஒன்று தருக.
.....................................................................
6. இரட்டைக்கிளவி ஒன்று தருக.
.....................................................................
7. "ஆதவனை" எனும் சொல்லிற்குரிய ஒத்த பதத்தை எழுதுக.
.....................................................................
8. "சேவல்கள்" என்ன பால் வகையாகும்?
.....................................................................

02. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.

1) வலம் - .....................................................................
2) மூளை - .....................................................................

03. பின்வரும் வாக்கியத்திலுள்ள வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களை ஒன்று வீதம் உரிய பெட்டியினுள் எழுதுக.

1. "என்னைப் பெற்றோர் வாழ்த்திப் பாராட்டினர்."

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

04. பின்வரும் பாடல் வரிகளைப் பூரணப்படுத்துக.

சின்னஞ் சிறு வில்லாய்க் கண்டதம்மா - பின்னர்
(1) ..................................................... தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
(2) ..................................................... கூறாயம்மா

05. பின்வரும் சொற்களில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களை நீக்கிய பின்வரும் புதிய சொற்களை எழுதுக.

மாமரம் - ........................................
வாழ்க்கை - ........................................

06. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை.
1) 216 2) 30 3) 18
2. நெடில் எழுத்துக்களில் ஒன்று.
1) அ 2) ஔ 3) உ

07. சரியான சொல்லைத் தெரிவு செய்க.

1) புல்த்தரை 2) புற்றரை 3) புல்ற்றரை
2) கொன்றை மரம் 2) கொண்டைமரம் 3) கொண்டமரம்

08. பிரித்து எழுதுக.

1. ஓடமொன்று =.................... +....................

சேர்த்து எழுதுக.

2. மாட்சியில் + உள்ளம் =........................................

09. சரியான சொல்லைத் தெரிந்து கோட்டில் எழுதுக.

1. சுரங்கத் தொழிலாளர் தங்கப் ........................................ வெட்டி எடுத்தனர்.
(பாலங்கலை / பாளங்களை)
2. நான் பரீட்சையில் சித்தியடைந்ததால் ........................................ படைந்தேன்.
(களிப் / கலிப்)

10. பின்வரும் சொற்களை உரிய அட்டவணையில் எழுதுக.

(விஞ்ஞானி , மாணவர்கள், மரங்கள், நோயாளி, ஆசிரியர்கள், புத்தகங்கள் , பூ , கண்ணன்)

| பலர்பால் | பலவின்பால் | இருபால் | பொதுப்பெயர் | ஆண்பால் | ஒன்றன்பால் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

11. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுக.

1. நாகரிகம் எனும் சொல்லின் எதிர்ச்சொல் அநாகரிகம் ஆகும். ( )
2. கல்வியை கவி எனவும் அழைப்பர். ( )

12. பின்வரும் படங்களுக்குரிய சிங்களச் சொல்லை எழுதுக.


........................................


........................................

தமிழில் உள்ள கருத்தை சிங்களத்தில் எழுதுக.

1. எனது இலக்கம் மூன்று.
.....................................................................

13. ஆங்கிலச் சொல்லில் தருக.

1. விமானம் - ........................................
2. பூக்கள் - ........................................
3. தமிழில் தருக.
What is this - ........................................


● பின்வரும் படத்தை அவதானித்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இருப்பதோடு எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக அமைதல் வேண்டும்).



1) .....................................................................
2) .....................................................................
3) .....................................................................

14. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1) இரண்டாயிரத்து நானூற்று முப்பத்தொன்பது என்பதை இலக்கங்களில் எழுதுக.
.....................................................................
2) I) 9605 எனும் எண்ணில் 6 அமைந்துள்ள இடப்பெறுமானத்தை தருக.
.....................................................................
II) 6 இன் பெறுமானம் யாது?
.....................................................................

3) 


I) எண்சட்டத்தில் வகை குறிக்கப்பட்டுள்ள எண்ணை எழுதுக.
........................
II) 6999 + 1 = ........................................

4) பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரை ஒழுங்கு முறையில் (இறங்கு வரிசையில் எழுதுக.)
52599 , 52550 , 49650 , 52600
.....................................................................

5) பின்வரும் எண்கோலத்தை அவதானித்து அடுத்துவரும் எண்களை எழுதுக.

I) 105 , 111 , 117 , 123 , .............. , ..............
II) 1 , 8 , 15 , 22 , .............. , ..............

6) 3m 50cm நீளமுள்ள நாடாவில் இருந்து 1m 25cm பகுதியொன்றை வெட்டி நீக்கினால் எஞ்சிய பகுதியின் நீளம் எவ்வளவு?
.....................................................................

7) நள்ளிரவு 12.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை செலவாகிய காலம் எத்தனை மணித்தியாலங்கள்?
.....................................................................

8) 48 மாணவர்களை நால்வர் கொண்ட எத்தனை குழுக்களாக பிரிக்க முடியும்.
.....................................................................

9) எனது தம்பியின் நிறை 1Kg 350g ஆகும். அம்மாவின் நிறை தம்பியின் நிறையின் 5 மடங்காகும். எனவே அம்மாவின் நிறை யாது?
.................... Kg .................................... g


10) 2250ml இல் எத்தனை 250ml உள்ளன?
.....................................................................

11) i - x வரையான உரோம எண்களை இடைவெளியில் எழுதுக.
i ...... ...... ...... ...... ...... ...... ...... ...... x

12) ஒரு பெட்டியில் 3209 புத்தகங்களும் வேறு ஒரு பெட்டியில் 959 புத்தகங்களும் இருந்தன. இரண்டு பெட்டியிலும் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை?
.....................................................................

13) ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு விருப்பமான காலை உணவு பற்றிய தகவல்களை அட்டவணை காட்டுகின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து வரும் நிரல் வரைபைப் பூர்த்தி செய்க.

| விரும்பிய உணவு | மாணவர் தொகை |
|---|---|
| அப்பம் | 5 |
| தோசை | 7 |
| இடியப்பம் | 4 |
| இட்லி | 8 |




14) 4350 கொய்யாப்பழங்கள் உள்ள கூடையில் 735 பழங்களை கண்ணன் விற்று முடித்தான். கூடையில் எஞ்சிய பழங்கள் எத்தனை?

.............................................................................................................

15) 30 நாட்கள் மட்டும் உள்ள மாதங்களையும் 31 நாட்கள் உள்ள மாதங்களையும் தனித்தனியாக எழுதுக.

| 30 நாட்கள் கொண்ட மாதங்கள் பெயர் | 31 நாட்கள் கொண்ட மாதங்கள் பெயர் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |
| 7. | 7. |

● 1 - 30 வரையான வினாக்களை வாசித்து விடையைத் தெரிவு செய்க.

பின்வரும் பாடலை வாசிக்குக.

நேர்மையுடன் செயற்படுவோம்
நேர்த்தியாக வேலை செய்வோம்
கோபத்தைத் தவிர்த்திடுவோம்
கனிவுடன் நடந்திடுவோம்

1. இப்பாடல் எமக்கு எதனை விளக்குகிறது.
1) தாழ்வான நடத்தை 2) ஆக்கிரமிப்பு நடத்தை
3) நடுநிலையான நடத்தை 4) முரண்பாடான நடத்தை

2. மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களில் அடங்காத விடயம்
1) பேருந்தில் உரத்த சத்தத்துடன் பாடல் ஒலித்தல்.
2) வரிசையாக காத்திருக்கும் இடத்தில் இறுதியாக வந்தவர் காரியத்தை முடித்துச் செல்லல்.
3) வெள்ளைக்கோடு இல்லாத இடத்தில் பாதையைக் கடத்தல்.
4) அடக்கமான குரலில் தாழ்த்திப் பேசுதல்.

3. உடலின் நல்ல இருப்பிற்குக் காரணமாக விளங்குவது.
1) தினமும் போதுமான அளவுக்கு நீர் அருந்துதல்.
2) இனிப்புப் பண்டங்களை அதிகம் உண்ணுதல்.
3) போதிய உடற்பயிற்சி செய்யாது இருத்தல்.
4) உடலை சுத்தம் செய்யாது இருத்தல்.

4. கவிதை புனைவதால் எமக்குக் கிடைக்கும் அனுகூலங்களில் அடங்காதது.
1) நல்ல பழக்கம் ஏற்படும். 2) கற்பனைத் திறன் வளரும்
3) மொழி வளர்ச்சியடையும் 4) வாசிக்கும் ஆற்றல் குறையும்.

5. சூரிய நமஸ்காரம் படிநிலைகளில் ஒரே வகையான படிகள்.
1) 2 - 11, 3 - 10 2) 5 - 6, 7 - 9
3) 4 - 5, 7 - 8 4) 9 - 5, 2 - 12

6. உள்ளத்தை இதப்படுத்தும் (தியானம்) செயற்பாட்டு படிமுறையை உரிய வகையில் ஒழுங்குபடுத்தும் விடை.
D - மலர்வு A - உடலைத்தளர்த்தல்
C - திடசித்தம் (மனவுறுதி) B - உள்ளத்தை தளர்த்தல்
E - பிரார்த்தனை
1) A, B, C ,D, E 2) E,C,D ,B , A
3) A , B , C ,E , D 4) D , C , B , A, E

7. பின்வரும் பாடலின் இடைவெளியில் வரும் விடையைத் தெரிவுசெய்க.
இன்சொல் பேசிடுவோம்
இனிய நட்பை நாடிடுவோம்
...............................................
உயர்வைப் பெற்றிடுவோம்
1. அறிவுரை கேட்டிடுவோம் 2. அறிஞர் ஆகிடுவோம்
3. உண்மை உரைத்திடுவோம் 4. மூத்தோரைப் பேணிடுவோம்

8. பின்வரும் படத்தில் உள்ள விளையாட்டு.



1. வட்டப்பாய்ச்சல்
2. கவனமாக வெல்வோம் மகிழ்ந்து
3. சக்கர அஞ்சல்
4. பந்து பிடித்தல்

9. எமது நாட்டிற்குரிய மரபுரிமைகளாக கொள்ள முடியாதவை.
1. மரச்செதுக்கல் குருத்தோலை வேலை 2. பண்டைய கட்டடங்கள் / இடங்கள்
3. ஓவியங்கள், சிற்பங்கள் 4. வீட்டுத்தோட்டங்கள்

10. உலக மரபுரிமைகளாக அமைவன.
1. சிகிரியா, சிங்கராசவனம் 2. தலதாமாளிகை, அலரிமாளிகை
3. படகமுவவனம், கொத்மலை நீர்த்தேக்கம்
4. மகாபோதிமரம், தேயிலைச்செடி

11. "தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெலாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்" எனும் வாசகம் பொருந்தக்கூடிய சின்னமாக விளங்குவது.
1. தேசியக்கொடி 2. தேசிய இலட்சினை 3. தேசிய கீதம் 4. தேசிய விளையாட்டு

12. சிங்கள பௌத்த மக்களின் ஊர்வலங்களில் அடங்காதது.
1. தலதா பெரஹறா ஊர்வலம் 2. மிகிந்தலை ஊர்வலம்
3. கரோல் ஊர்வலம் 4. கதிர்காம பெரஹறா ஊர்வலம்

13. பண்டிகைக் காலங்களில் மாக்கோலம் போடும் சமயத்தவர்.
1. பௌத்தர் 2. இந்துக்கள் 3. இஸ்லாமியர் 4. கிறிஸ்தவர்


14. இலங்கை பிரித்தானியரால் முழுமையாக கைப்பற்றப்பட்ட ஆண்டு.
1) 1815 2) 1942 3) 1796 4) 1608.

15. வீடுகளுக்கு குடிநீர் இணைப்பை வழங்குவது.
1. கல்வித்திணைக்களம் 2. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை
3. வைத்தியசாலை 4. அஞ்சல் அலுவலகம்

16. இலுப்பைப் பூ பூக்கும் மாதம்.
1. ஆடி 2. ஆவணி 3. ஆனி 4. புரட்டாதி

17. நீண்டநாள் வாடாதிருக்கும் வீட்டுத்தோட்ட பூஞ்செடிகள்.
1. நித்தியகல்யாணி, செவ்வரத்தை 2. சீனியாஸ், செவ்வந்தி
3. கோலியாஸ், மல்லிகை 4. எக்சோ்ரா, செவ்வரத்தை

18.





பின்வரும் படம் குறிக்கும் பரிசோதனையாவன.
1. வேரின் மூலம் தாவரம் நீரை உறிஞ்சுதல்.
2. தண்டு மூலம் தாவரம் நீரைப்பெறல்.
3. சூரிய ஒளிமூலம் உணவு தயாரித்தல்.
4. இலை மூலம் உணவு தயாரித்தல்.

19. சுவரில் நிலைக்குத்தாக ஊர்ந்து செல்லும், நீண்ட ஒட்டும் தன்மையான நாக்கினால் பூச்சிகளை பிடித்து உண்ணும் பிராணி.
1. தவளை 2. பாம்பு 3. பல்லி 4. சிலந்தி

20. பகல் வேளையில் பொந்தினுள் ஓய்வெடுக்கும் பறவை.
1. கிளி 2. மரங்கொத்தி 3. மைனா 4. ஆந்தை

21. சிறந்த பாவனைக்கு உகந்த பொருள் என்பதை விளக்கும் இலங்கை தரச்சான்றிதழ்.

1.  2.  3.  4. 

-8-

22.



அருகில் உள்ள உருவைத் தைக்க பயன்படும் தையல் வகை.
1. பெருநூலோடி 2. சங்கிலி 3. நரம்பு 4. விஸ்பம்

23. நீண்டகாலம் பேணிப் பாதுகாக்கப்படும் உணவுப்பொருட்களின் கூட்டம்.
1. உப்பு, சீனி, தேன், வினாகிரி 2. பால், தேன், சீனி, பருப்பு
3. வெண்ணெய், தண்ணீர், உப்பு, சீனி 4. மாங்காய், பால், சீனி, தண்ணீர்

24. மாணவர்கள் பருவகால பயணச்சீட்டு வழங்கி பயணம் செய்யும் போக்குவாரத்து சாதனம்.
1. கார், ஆட்டோ 2. பேருந்து, தொடரூந்து
3. ஆட்டோ, துவிச்சக்கரவண்டி 4. விமானம், கார்

25. மனிதர்கள் குழுவாக வேலை செய்யும் சந்தர்ப்பமாக அமையாதது.
1. அரிவு வெட்டுதல் 2. சுரங்கம் அகழ்தல்
3. களை பிடுங்குதல் 4. சித்திரம் வரைதல்

26. எமக்கு இலவசமாக கிடைக்கும் சேவை.
1. கல்வி 2. உணவு 3. போக்குவரத்து 4. தொலைத்தொடர்பு

27. கடல் இல்லாத மாவட்டங்கள்.
1. புத்தளம், குருநாகல் 2. அநுராதபுரம், பொலநறுவை
3. களுத்துறை, கம்பஹா 4. அம்பாறை, மட்டக்களப்பு

28. காலிக் கோட்டையை அமைத்தவர்கள்.
1. ஒல்லாந்தர் 2. ஆங்கிலேயர் 3. போர்த்துக்கேயர் 4. முஸ்லிம்கள்

29. பசவக்குளம் , பராக்கிரம சமுத்திரம் அமைந்துள்ள மாவட்டங்கள் முறையே.
1. மாத்தளை, கம்பஹா 2. அநுராதபுரம், பொலநறுவை
3. பொலநறுவை, நாத்தாண்டியா 4. அநுராதபுரம், கண்டி

30.



பின்வரும் படம் குறிப்பது.
1. யாப்பகூவா சிங்கம் 2. எம்பக்க செதுக்கல்
3. குருத்தோலைக்கீற்று 4. சந்திரவட்டக்கல்

## கல்விப் பொதுத்தராதர (சாதாரணதரம்) சுகாதாரமும் உடற்கல்வியும் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 4 | 21) 2 | 31) 3 |
| 2) 1 | 12) 1 | 22) 3 | 32) 2 |
| 3) 1 | 13) 2 | 23) 4 | 33) 3 |
| 4) 4 | 14) 2 | 24) 1 | 34) 1 |
| 5) 3 | 15) 3 | 25) 3 | 35) 4 |
| 6) 3 | 16) 4 | 26) 2 | 36) 2 |
| 7) 2 | 17) 3 | 27) 1 | 37) 1 |
| 8) 1 | 18) 4 | 28) 3 | 38) 4 |
| 9) 4 | 19) 1 | 29) 1 | 39) 2 |
| 10) 2 | 20) 1 | 30) 2 | 40) 2 |